
தலைதாழ்வில்



சுனிதாச்சின்ன மலைத்தேன்

கலைஞரின்
சின்னச் சின்ன மலர்கள்

திருமுருகன் பூண்டி அரசு கலைக் கல்லூரி
முதல்வர் நூலகம்
பேராசிரியர்
ஆய்வக நூல்
நிலையம்
சென்னை-18
முன்னா அறிவாலயம்

டாக்டர். கலைஞர் மு.கருணாநிதி

பாரதி பதிப்பகம்
108, உஸ்மான் சாலை,
தியாகராய நகர் :: சென்னை-17
த.பெ.எண்: 4984 :: போன்: 4340205

3538
கண்ணதாசன்

விலை : ரூ.50.00

○ Kalaingnarin Chinna Chinna Malargal ○ By : Kalaingnar M.Karunanidhi ○ Second Edition : September 2002 ○ ○ Third Edition : December 2006 ○ Price : Rs. 50.00 ○ © Tamizhkani Pathippagam ○ Publisher: BHARATHI PATHIPPAGAM, No. 126/108, Usman Road, T. Nagar, Chennai - 600 017.○ Post Box No : 4984 ○ Phone : 24340205○ Printed at : Sivakami Printo Graphics, Triplicane, Chennai-600 005. Phone : 28445051.○

பொங்கும் புதுமுன்!

சின்னஞ் சின்னஞ் குடிசைகள்; மிகுதும் கிழக்கும்
குடிசைகளைப் பார்ப்பதில் வருத்தம்! பொங்கலும்
பூந்தாமும்! உள்ளத்தில் உவகை கூத்து!

மனைப்பொங்கற்கான அரிசியும்,
பொங்கலரிசி மிகுந்து கிழக்குமூலையும்
முன் சின்னஞ்சின்ன மண்பானைகளும் காணுமே!
என்ன கோல மெய்தும்!

அந்தமரத்தில், தினைக் கதிரின்
மணிகளை உண்டுகளித்த உவகையை வேட்டைகளில்
நானும் மனைவியும் மிகுந்த பசுமை பார்த்துவரலாம்
முன் வாய்ப்பு எப்போதென்றேனே,

தினைக் கோட்டைக் கோட்டைகளில்
புதைவது போல என் நினைவைக் கோட்டுகிறேன்; விரும்
பொது விலங்கிட்ட மனங்களை பனமனங்கள்!

ولي أمر الطالب المذكور أعلاه

السلام عليكم ورحمة الله وبركاته، وبعد:

نحيطكم علمًا بأن ابنكم المذكور أعلاه قد تغيب عن المدرسة بدون عذر مقبول لعدد من الأيام خلال الفترة الماضية، وقد تم إنذاره شفهيًا وكتابيًا بضرورة الالتزام بالحضور المنتظم.

وحيث إن الغياب المتكرر يؤثر سلبًا على مستواه الدراسي وانضباطه، فإننا نأمل منكم التعاون معنا في متابعته وحثه على الانتظام في الحضور.

وتقبلوا فائق الاحترام،،،

مدير المدرسة: ..... التوقيع: .....

எனது இதயத்துடிப்பை உன்னுடைய நினைவாக; தொலைவில் புதுமலர்களும் புத்தாடைகளும்.

என்னெஞ்சில் மலர்ந்தவை - என்னை வேதனைப் படுத்தியவை - உணர்ந்தவை - உணர்த்தியவை - வேண்டியவை - வேண்டாதவை - எனையனைத்தும் கொண்ட ஓட்டுப்பை இந்தப் புத்தகப் பையே!

"திமிழ்மணி" பதிப்பகத்திற்கு எனது இதய ஆவின் முதற்பதிப்பையென் மடல்வழி கொள்ள முன்வரும்" பாரதி" பதிப்பகத் தோர்க்கு நன்றி அறிவித்தும் கொள்கிறேன்.

தோழமை

[illegible]

28/8/1994.

பதிப்புரை

வரலாற்றுப் புதினங்கள் — சமூகப் புதினங்கள் - கவிதைகள் - பண்டைத்தமிழ் இலக்கியங்களைச் சாதாரண மக்களும் புரிந்து கொள்ளும் வகையில் எளிமைப்படுத்தி எழுதிய இலக்கிய விளக்க நூல்கள், தமிழகத்தின் அரை நூற்றாண்டுக்கால அரசியல் வரலாற் றோடு பின்னிப்பிணைந்த தனது வரலாறு, அறிஞர் பெருமக்களும் — சாதாரண மக்களும் பாராட்டும் வகையில் குறளுக்கு எழுதிய விளக்கம், தமது அன்பு உடன்பிறப்புகளுக்கு அன்றாடம் எழுதிய அரசியல் - சமூக - இலக்கியக் கடிதங்களின் தொகுப்பு என்று டாக்டர் கலைஞர் அவர்கள் - தமிழன்னைக்கு விதவிதமாய் 'பொன் மலர் நாற்ற முடைத்து' என்று வியந்து பாராட்டத் தக்க வகையிலான 'பொன்னாபரணங்'களைப் பூட்டி மகிழ்ந் திருக்கிறார்.

கலைஞரின் படைப்புக்களில் பெரும்பாலானவற்றை வெளி யிட்ட பெருமை நமது பாரதி பதிப்பகத்திற்கு உண்டு!

இதோ இந்த 'சின்னச் சின்ன மலர்'களையும் தமிழன்னையின் திருவடிகளில் தூவுவதில் பாரதி பதிப்பகம் பெருமிதமும் பெருமை யும் அடைகிறது.


முரசொலியின் பொன்விழாவை யொட்டி - நாள்தோறும் - 'முரசொலி'யில் - தமது கருத்துக்களை 'சின்னச் சின்ன மலர்கள்' என்ற பெயரில் கலைஞர் எழுதி வந்தார்! பெரும்பாலும் அன்றைய அரசியல் நிகழ்வுகளை ஒட்டி கலைஞரின் சிந்தனை மலர்கள் - மணம் பரப்புவது வழக்கம் என்பதால் - அனைவரும் - அந்தக் கால கட்டத்தில் - முரசொலியைப் பிரித்தால் - முதலில் - இந்தச் சின்னமலரின் மணம் நுகரவே துடிப்பது வழக்கம்!

இந்த நூலை வெளியிட எமக்கு அனுமதி தந்த டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் தமிழ்க்கனி பதிப்பகத்தாருக்கும் நன்றி கூறி - தமிழ் கூறு நல்லுலகத்தின் திருமுன்னர் மணமிக்க இந்த மலர்களைத் தொ(டு)குத்துத் தருவதில் பெருமை அடைகிறோம்.

— பதிப்பகத்தார்.

கலைஞரின்
சின்னச் சின்ன மலர்கள்

பேராசிரியர்
ஆய்வகம் நூல
நிலையம்
சென்னை-1
அண்ணா அறிவ




அறிஞர் அண்ணா கூறியதுபோல்; வீசும் புயலுக் கிடையே, கொட்டும் மழையில், சரளைக் கற்கள் மீது நடந்து குன்றின் உச்சியில் கொண்டு போய் வைக்க, அகல் விளக்கு ஏந்தி, அதனை அணையாமல் காத்து மேல் நோக்கி ஏறுகின்ற மன உறுதியும் கொள்கை ஆழமும் நிதானப்போக்கும் இருந்திடில் அந்த இலட்சிய தீபம் குன்றின் உச்சியில் ஒளிவிடுவதை எவரும் தடுத்திட முடியாது!

அனுபவம் ஒரு பள்ளிக்கூடம் - ஆனால் அதில் ஆணவக்காரர்கள் கற்றுத் தேர்வதில்லை.



அதிகார முறைகேடும் - சட்டம் தவறாகப்
பயன்படுத்தப்படுவதும்
விரும்பத்தகாத வன்முறை விளைச்சலுக்கு
எருவாகும்போது; நீதியும் சேர்ந்து வளைந்து
விடுமேயானால் - அது, அந்த விளைச்சலுக்குத்
தேவையான நீராகவும் ஆகிவிடும்!

அளந்து பேசு; அதற்காக அளக்காதே! நினைத்துப்
பேசு; ஆனால் நினைத்ததையெல்லாம் பேசாதே!



அறம், பொருள், இன்பம் என மூன்று மட்டுமல்ல;
'வீடு' என ஒன்றுண்டு - அதுவே "மோட்சம்" என்பர் சிலர்!
பலகோடி மக்களுக்கு வசிப்பதற்கே 'வீடு' இல்லை
என்பதைப்பற்றிக் கவலைப்படாதவர்கள் அவர்கள்!

✲

அலைகள் ஓய்ந்த பின்னரே நீராட வேண்டுமெனக்
காத்திருப்பவரும் - இடையூறுகள் இல்லாத
போதுதான் பொதுவாழ்வில் ஈடுபடவேண்டுமென
நினைப்போரும் ஒரே வகையினர்தான்!

✲



அடிக்கடி நிலைக்கண்ணாடியில் முகம்
பார்ப்பதுபோல நமது அகக் கண்ணாடியிலும்
நம்மைப் பார்த்துக் கொண்டால்; அதனால்
எத்தனையோ பிழைகளைத் திருத்திக் கொள்ள
முடியும்.

அரங்கேற்றத்திலேயே மேதையாக யாரும்
திகழ்ந்துவிட முடியாது; ஆனால்
அரங்கேற்றத்திலேயே ''இவர்கள் மேதைகளாக
வருவார்களா; இல்லையா?'' என்பதை
அறிய முடியும்.



அஷ்டமா சித்து புரியும் ஆண்டவனின் அவதாரமான மகான் என்று தன்னைச் சொல்லிக்கொள்பவருக்கும் - ஒரு மாஜிக் நிபுணருக்கும் வேறுபாடு என்ன?

மக்களை ஏமாற்றி வித்தை காட்டிப் பணம் சம்பாதிப்பதுதான் தனது தொழில் என்பதை மாஜிக் நிபுணர் நாணயமாக அறிவித்துவிடுகிறார்!

அராஜகம், ஊழல் என்று புரையோடிவிட்ட புண்ணை ஆட்சி - அதிகாரம் என்ற புனுகு, ஜவ்வாது தடவி அதிக நாள் மறைத்து விட முடியாது.



அதிகாரத்துக்கு வளையும் நீதியுடன்
அதிகாரம் என்ற சொல்லின் முதல்
எழுத்து இணைந்து ''அநீதி''
ஆகிவிடுகிறது!

அன்பையும் மனிதாபிமானத்தையும் கொன்று தின்கிறவன், ஆண்டவனை ஏப்பம் போல் வெளியே விட்டுவிடுகிறான். அன்பையும் மனிதாபிமானத்தையும் வாரி வழங்குகிறவன், ஆண்டவனைத் தனக்குள் அடக்கி வைத்துக் கொள்கிறான். அவனே ஆண்டவன் ஆகிவிடுகிறான்.



அடிமையாக இருப்பவன், தனக்குக் கீழே ஓர் அடிமை இருக்க வேண்டுமென்று கருதினால்; உரிமைகளைப் பற்றிப் பேச அவனுக்கு உரிமையே கிடையாது!

✡

அண்ணா கண்ட இந்த இயக்கத்தின் ''தலை எழுத்தில்'' தான்; நம் ஒவ்வொருவர் ''தலை எழுத்து''ம் அடங்கியிருக்கிறது. தனிப்பட்ட நம்மில் ஒருவரின் ''தலையெழுத்தா''ல் இந்த இயக்கம் தலைதூக்கி நிற்கவில்லை; என்பதை உணர்ந்து பணியாற்றினால் - நம்மை உரசிப்பார்க்க நினைப்போர் ஒய்ந்து போய் உட்கார்ந்துவிடுவர்.

✡



குடிமக்களின் குறைந்த அளவுத் தேவையான உணவு, உடை, வீடு மூன்றையும் கூடத் தர முடியாத நாடு சுதந்திர நாடாக இருந்தாலுங் கூட; அது உண்மையில் அடிமை நாடே!

✵

குறைந்த சதவிகிதமேயுள்ள ஒரு வர்க்கத்தின் ஆதிக்கத்துக்கு ஆபத்து வருமேயானால் அந்த வர்க்கத்தைச் சேர்ந்த ஏடுகளுக்கெல்லாம் இரத்தம் கொதிப்பதைப் பார்த்த பிறகாவது; ஒடுங்கிக் கிடக்கும் நமது இனத்தவர்க்கு சூடு சொரணை ஏற்பட வேண்டாமா?

✵



கலங்கரை விளக்கம் போலவும்
நங்கூரம் போலவும் பயன்படக் கூடியது
கடந்தகால அனுபவம்.

✵


கருமுகில் குளிர்ந்து பெய்யும் மழையை
வகைப்படுத்தி, வாய்க்கால் அமைத்து, வயல்
வரையில் கொண்டு போனால்தான்
பயிர் கிடைக்கும். பயன் விளைக்கும். இல்லையேல்
காட்டாற்று வெள்ளமாகத்தான் ஆகிவிடும்.
அமைப்பு முறையும் அதில் கட்டுப்பாடும் இல்லாத எந்த
இயக்கத்துக்கும் இதே நிலைதான்!

✵



கரடு முரடான தோற்றங்கொண்ட பலாவுக்குள்ளே சுவை நிறைந்த சுளைகள் இருக்கும். பளபளப்பான பாம்புக்குள்ளே கொடுமையான விஷம் இருக்கும். எனவே எவரையும் உருவை மட்டும் பார்த்து எடை போடாமல் உள்ளத்தை வைத்தே எடைபோட வேண்டும்.

''**க**டிதோச்சி மெல்ல எறிக'' எனும் குறள் மொழியைக் கவனத்தில் கொள்ளாத அரசு - கடையாணி இல்லாத வண்டிக்கு ஒப்பாகும்!




ஓர் இயக்கத்தில் பொதுவேலைகளைத்தேடி
ஓடுகின்ற தொண்டுள்ளம்
கொண்டவனைத்தான்
புகழ்மாலைகளும் தேடி ஓடிவரும்!

ஓய்வு என்பது வேலை செய்து
கொண்டிருப்பதுதான் என உணர்பவர்களே
பொதுத் தொண்டில் ஊக்கமுடையவர்களாக
இருக்க முடியும்.



ஒரு நந்தவன சாம்ராஜ்யத்தில் தான் மட்டுமே
ரோஜாவாகப் பூத்திருக்க வேண்டும்;
ஏனைய பூக்கள் அனைத்தும் எருக்கம் பூக்களாகவே
இருக்க வேண்டுமென்பவர்தான்
சர்வாதிகாரியாக அடையாளம் காட்டப்படுகிறார்.

ஒவ்வொருவர் மகிழ்ச்சியிலும் உனக்கும் பங்கு
இருப்பதாக எண்ணிக்கொண்டால்; உனக்குள்
பொறாமை தலைகாட்டாது!
ஒவ்வொருவர் துன்பத்திலும் நீயும்
இணைந்திருப்பதான உணர்வைப் பெற்றால்; உனக்குள்
தன்னலம் தலை தூக்காது!



எழுத்துக்கு எழுத்து - பேச்சுக்குப் பேச்சு
பதிலுக்குப் பதில் - அரசியலில் தவிர்க்க
முடியாதவைகள்!
ஆனால் ரசம் கெடக் கூடாது!
விரசம் தலை நீட்டக் கூடாது!
விரசம் விரோத உணர்ச்சிகளுக்கு
வித்திடுகிறது!
அந்த வித்து வளர்ந்து ''பகைமரம்''
தழைத்துவிடுகிறது!



எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சு
எல்லோரும் சமம் என்பது என்ன ஆச்சு?

✲

எதை இழந்தாலும், நம்முடைய தமிழை, தமிழ்
உணர்வை இழக்காமல் நாம் பாதுகாத்துக்
கொள்ள வேண்டும். நாமே அழிய
நேரிட்டாலும், நம்முடைய தமிழை,
தாய்மொழியை, தமிழ் உணர்வை அழிய
விடாமல் பாதுகாக்கின்ற அந்த உணர்வை நாம்
பெற வேண்டும்.

✲



உறுதி குலைந்தவனுக்குப் பலமாக ஒரு படையே இருந்தும் பயனில்லை! உறுதி கொண்டவனுக்கோ கையில் ஓர் உடைந்த வாளே போதுமானது!

✲

உயிரினங்கள் வாழுகின்றன; ஆனால் அவற்றில் மனிதன் மட்டுமே வாழ்க்கை நடத்துகிறான். அதையும் மானத்துடன் நடத்தினால்தான் அவன் மனிதனாக மதிக்கப்படுகிறான்.

✲



நமது காலில் தைத்த முள்ளையெடுத்து
அதை பாதையில் போட்டுவிட்டுப் போகாமல்
அந்த முள்ளின் முனையை மூறித்து; யாரும்
நடமாடாத ஒரு ஓரத்தில் வீசிவிட்டுப்
போகவேண்டும்.

நன்மைகள் கோடி விளைவதாக இருப்பினும்;
அந்த விளைச்சலை, வன்முறைக் கழனியில்
காணமுனைவது - மனித நேயப் பண்பாட்டுக்கு
முற்றிலும் மாறுபாடான காரியமே ஆகும்.



தவறு செய்தால் கடவுளிடம் மன்னிப்புக் கேள் என்கிறார்கள். மன்னிப்புக் கேட்டுக் கொள்ளலாம் என்ற தைரியத்தில் தவறுகளைச் செய்து கொண்டே இருந்தால் இறைவன் ஓர் ஏமாளி என்றுதானே நினைப்பு?



தாயை ஒருவன் கற்பழிக்க முயல்வதைக் கண்டும் காணாதது போல ஒரு மகன் இருப்பானேயானால், அவன் தனது தாய்மொழியைப் பிறமொழி அடிமை கொள்வதையும் பொறுத்துக் கொண்டுதான் இருப்பான்.





மாந்தர் தம் உடல் நலத்துக்கேற்ற மாமருந்துகளில் துளசியும் ஒன்று என்கிறது மருத்துவ நூல்! ஆனால் நாம் அதற்கு மாடங்கட்டியல்லவா மண்டியிட்டுக் கொண்டிருக்கிறோம்!

மாற்றாரின் பகை என்ற மலையைக் கடுகாக ஆக்க வேண்டுமெனில்; நமது பாசறைக்குள் தோன்றும் கருத்து வேறுபாடு எனும் கடுகை, மலையாக ஆக்கிடாமல் இருக்க வேண்டும்.



மேதைகளுக்கு, வாழ்க்கை எப்போதும் இனிமையாகவே இருக்கும். ஏனெனில் அவர்கள் நட்டத்தை இலாபமெனக் கருதுகிறார்கள். இலாபத்தை நட்டமெனக் கருதுகிறார்கள்.

❋

''மேய்ப்போன்'' போல சிலர் காட்டிக் கொள்வர். ஆனால் அவர்கள் ஆடுகளைக் கசாப்புத் தொழிலுக்குப் பலி கொடுக்க ஓட்டிச் செல்லும் ''ஏய்ப்போன்'' ஆக இருந்திடுவர்!

❋



மத்தாப்பு; வண்ணவண்ண வெளிச்சம் காட்டும். நொடியில் கருகிவிடும். மெழுகுவத்தி ஒளி வழங்கும். நின்று எரியும்.

மதப்பற்று இல்லாமலே இருப்பது மிகவும் மேலானது! அப்படியே பற்று இருந்தாலும்; அந்தப்பற்றுக்கு அடையாளம்; பிற மதங்கள் மீது ஆதிக்கம் செலுத்துவதோ - பகை கொள்வதோ அல்ல! அல்லவே அல்ல!




சுயநலவாதி; தனது புகழை நீரில் எழுதி வைக்கிறான்!
பொதுநல தியாகி; கல்லில் செதுக்கிடுமளவுக்கு
வாழ்ந்து மறைகிறான்!

✵

நம்முடன் நட்பாக இருந்து ஒருவருக்குக்
கிடைக்கும் நன்மையால் நமக்கு ஏற்படும்
மகிழ்ச்சியைவிட; நம்முடன் பகை கொள்வதால்
அவருக்குக் கிடைக்கும் நன்மை கண்டு இரட்டிப்பு
மகிழ்ச்சி கொள்வதே நம்
இதயத்திற்கு இதம் தருவதாகும்.

✵



திராவிட இயக்கத்தின் கருத்துக்கள் சிலவற்றுக்கு உடனடியாக வெற்றி கிடைக்காமல் இருக்கலாம் - ஆனால் கிடைத்தே தீரும் என்பதற்கு எடுத்துக் காட்டுத்தான் 1929 செங்கற்பட்டு சுயமரியாதை மாநாட்டில் பெண்களுக்கும் சொத்தில் சம உரிமை என்று கொண்டுவரப்பட்ட தீர்மானம் 60 ஆண்டுகளுக்குப் பிறகு கழக ஆட்சியில் 1989ல் சட்டமாக்கப்பட்ட நிகழ்ச்சியாகும்.

✵

திராவிட இயக்கத்தின் வேரில்; கொதிக்கும் நீரை ஊற்றிக் கொண்டே, பெரியார் பெயரையும், பேரறிஞர் அண்ணா பெயரையும் பிரச்சாரத்துக்காகப் பயன்படுத்துவது பெரியதோர் மோசடி!

✵



தேன்கூடும் கஞ்சனின் கருவூலமும் ஒன்றுதான்!
காரணம்; இரண்டுமே அவற்றை நிரப்பிட
உழைத்தவர்க்குப் பயன்படுவதில்லை!

✲

தேனிருக்கும்-திறக்கும் பூவிதழில்!
தேனிசை இருக்கும்-பறக்கும் வண்டின் இறகில்!
மானிருக்கும் மலைப்புறத்தில்! வான் நோக்கித் துள்ளும்
மீனிருக்கும் வயற்புறத்தில்! நாணம் இருக்கும்
நல் மங்கையர் முகத்தில்! மானம், மானமெனத்
துடிக்கும் மாண்பிருக்கும் வீரர் நெஞ்சில்!

✲



நியாயத்திற்காகக் குரல் கொடுப்பது தவறு
எனத் தண்டனை வழங்கப்படுமேயானால்;
அந்தத் தவற்றை - அது நியாயம் என
ஒப்புக் கொள்ளப்படுகிற வரையில்
செய்து கொண்டேயிருக்கலாம்!

நீதியற்ற ஆட்சிக்குப் புகழாரம் சூட்டுவோரும்
நெருப்புக்குப் பஞ்சு மெத்தை விரிப்போரும்
ஒரே வகையினரேயாவார்!



நெருப்பில் போடப்படுவதெல்லாம்
கருகிவிடுவதில்லை.
சுடச்சுட ஒளிரும் தங்கம் நெருப்பிலிருந்துதானே
வெளிவருகிறது! கருகிச் சாம்பலாகவா போய்
விடுகிறது? எல்லா சரீரங்களும் நெருப்பில்
அழியக்கூடியவைதான் - ஆனால் அந்த நெருப்பில்
எழுதப்பட்ட சரித்திரங்கள் சாகாவரம்
பெற்றவையல்லவா?

நெஞ்சில் அன்பின்றித் தருவது
அமிழ்தமே ஆயினும்; அது
நஞ்சுக்கு ஒப்பானதே ஆகும்.




பூ, மலர்வதும் - கருகி மடிவதும், ''காயமே இது பொய்யடா'' எனக் கழறுபவர் பயன்படுத்திக்கொள்ளும் உதாரணங்களில் ஒன்று! ஆனால், மலர்ந்த பூ - மணம் வீசுகிறதே - அதைத்தான் அறிவியக்கம் சுட்டிக்காட்டி, வாழும் நாட்களில் சமுதாயத்திற்காகப் பணியாற்றுவோம் என்கிறது!

✲

பூக்களிலே கூட 'சாதி மல்லிகை' என்ற ஒரு பூ இருக்கிறது. மனிதர்களைப் பார்த்து மாசற்ற மலர்க் கூட்டமும் கெட்டுப் போயிருக்கிறது போலும்!

✲



பூனையின் மிருதுவான பாதங்களுக்குள்
கூர்மையான நகங்கள் ஒளிந்திருக்கும்.
சிலர் மென்மையாகப் பேசும்போது இந்த உண்மை
நமது நினைவில் இருக்க வேண்டும்.

✲


பூவிதழினும் மென்மையான புனித உள்ளம்
அண்ணாவுக்கு எனினும்; அவர் புறப்பட்டார்
தமிழ்காக்கும் போருக்கு என்றபோது -
தணல் காற்று வீசக்கண்டோம்! அதனாலே
தமிழ்காக்க நாமும் என்றும் தடந்தோள்
தட்டி எழுவோம்!

✲



மரணம் மாவீரனுக்குத் தரப்படும் மலர்ச்செண்டு
மங்கையின் இதழைவிடச்
சுவையானது என்றெண்ணிடும்
மனவலிமை கொண்டவர்களே,
இலட்சியப் பாதையில்
வெற்றிக் கொடிகளை நாட்ட முடியும்.

மனிதன் வளர்க்கிற நாய் ஏன்
நன்றியுடன் இருக்கிறது? அது
மனிதனாகப் பிறக்கவில்லையே; அதனால்தான்!



சுதந்திரக் காற்றை சுவாசிக்கின்றான்
இந்திய நாட்டு ஏழை! அது உண்மைதான்!
ஆனால் அவன் சுத்தமான காற்றை
சுவாசிப்பது எப்போது?

✲

தன் தவறுகள் சுட்டிக் காட்டப்படும்போது திருந்திக் கொள்வதற்குப் பதிலாகச் சுட்டியவன் மீது எரிந்து விழுந்து; ஓர் இயக்கத்திற்கோ, நிறுவனத்திற்கோ எதிரியாக மாறுகிறவர்களை அவர்களது மனச்சாட்சியே தண்டித்துவிடும்! அப்படியொன்று இருந்தால்!

✲




வன்முறை விரும்பத்தகாதது! வெறுக்கத் தக்கது! ஆனால் சில நேரங்களில் ஜனநாயக முறையின் இமாலயத் தவறுகளே வன்முறையின் விளை நிலங்களாகின்றன!

❋

வீரன், ஒருமுறைதான் சாவான்; கோழை பலமுறை சாவான் என்பதில் ஒரு திருத்தம்; வீரன் சாவதே இல்லை! கோழை வாழ்வதே இல்லை!

❋



கொடுக்கல் வாங்கலில் முறைகேடு என்றால்;
அதன் விளைவு மனத்தாங்கல்தான்!

✲

கிழிந்துபோன செருப்புகூட இல்லாமல் தகிக்கும் வெயிலில் தவித்து நடக்கிறானே; அந்தப் பஞ்சையைப் பற்றிப் பரிதாபப்பட யார் இருக்கிறார்கள்?

ஏனில்லை? பகவானின் பாதக் குறட்டிலிருந்து ஒரு நவரத்தினக்கல் உதிர்ந்துவிட்டால், அதற்கே பதைத்துப்போய் பாபவிமோசனம் தேடும் பக்த சிகாமணிகள் பல்லாயிரவர் உண்டே இந்தப் பாரத புண்ணிய பூமியில்!

✲



"என் பாட்டன் வைத்த மாமரத்தின் பழத்தை நான் சாப்பிடுகிறேன். நான் இப்போது நடும் செடியின் பயனை என் பேரன் அனுபவிப்பான்" என்பது தொடக்கப் பள்ளிப் பாடத்தில் வரும் கதை என்றாலும்; வீட்டுக்கு மட்டுமல்லாமல் நாட்டுக்கும் நாம் ஆற்றுகிற தொண்டுக்கு உடனடிப் பயனை நாமே எதிர்பார்க்கக் கூடாது எனும் அறிவுரைக் காவியமாகவும் அது விளங்குகிறதல்லவா?



இன்றைக்கு ஒன்று கிடைப்பதற்காக;
நேற்றைக்கு ஒன்று தந்தவரை
இகழ்பவர் - விலைமாதினும் கீழானவர்!

✲

இரவு நேரத்தில் காரில் பயணம் செய்யும்போது நமது காரின் விளக்கொளியில் எதிரே வரும் ஆட்டுமந்தையின் கண்கள் வைரங்களைப் போல் ஜொலிப்பதைக் காண முடியும். ஆனால் அந்த ஆடுகளை ஓட்டி வருபவன் அவற்றின் பின்னால் வருவதால் அந்த ஒளியைக் கூடப்பார்க்க முடிவதில்லை.

✲



ஈட்டிய பொருளைப் பாதுகாத்துப் பகிர்ந்து உண்ணும்
எறும்புகளாக இருக்க வேண்டுமேயல்லாமல்;
இனிப்பான தேனைச் சேகரிக்க இடையறாது
சுழன்று திரிந்து இறுதியில் கோட்டைவிடும்
தேனீக்களாக இருந்து பயன் என்ன?

✲

இலட்சியப் பயணத்தில் - கொள்கையை நிலை
நாட்டும் போரில் - எண்ணியது முழுவதும்
உடனே கிடைத்து விடுவதில்லை! அதற்காக, ''கிடைத்தது
போதும்'' என்று அந்தப் பயணமும் போரும் நின்று
விடுவதில்லை.

✲




அழுத்தமான ஓடுதனைப் பாதுகாப்புக் கவசமாகப் பெற்றிருந்தாலும்; அஞ்சி, நடுங்கி, அடங்கிக் கிடப்பவர்களுக்கு ஆமையைத்தானே உவமைகாட்ட வேண்டியிருக்கிறது. எனவே உடலுறுதியை விட உள்ளத்து உறுதியே மேன்மையானது.

✵

அடுப்பின் நெருப்புக்கும், கொதிக்கும் தண்ணீருக்கும் இடையில் தன்னைத்தானே அர்ப்பணித்துக் கொண்டால்தானே அரிசி, அமுதமான பொங்கலாக முடிந்தது. ஆயிரமாயிரம் அரிசிகள், தங்களை வருத்திக் கொண்டதால், உலைபொங்கி முடிந்ததும் அவைகள் அன்னமெனும் பெயரைப் பெற்றன. அப்படித்தான் ஒருசில கொள்கைகளுக்காகத் தங்களை வருத்திக் கொள்ளும் உணர்வு படைத்த தொண்டர்கள் தியாகிகளாகிறார்கள்!

✵



கலை, கலைக்காக மட்டுமே என்பது
விளக்கு, விளக்குக்காக மட்டுமே
என்பது போன்ற விபரீதக் கருத்து!

❋

''**க**டவுளைத் தேடிக்கொண்டு அலையாமல்
கடமையைச் செய்'' என்று
யார் சொன்னார்களோ; அவர்களையே
கடவுள்களாக்கிவிட்டு கடமையை மறப்பது
அறிவுடைமையாகுமா?

❋



''தென்னை மர்த்தில் புல் பிடுங்க ஏறினேன்''
என்றான், காவலரிடம் சிக்கிக் கொண்ட
திருடன்!

''தென்னை மரத்தில் ஏதப்பா புல்?'' என்று
கேட்டதும் - ''அதனால்தான் இறங்கிவிட்டேன்''
என்றான் அவன்!

அந்தத் திருடனை நம்பினால் திருந்துமா
சமூதாயம்?

✲

தண்ணீர்த் துளி தாமரை இலையில் இருக்கும் வரையில் கதிரொளிபட்டு, தகதகவென ஜொலிக்கும்! தரையில் விழுந்து விட்டால் தரையே அதனை உறிஞ்சி விடும்!


✲



இந்தி ஆதிக்கத்தை ஏற்பது தூண்டில் முள்ளில் உள்ள புழுவைக் கண்டு கெண்டை மீன் ஏமாறுவதைப் போன்றது!


எதிர்காலத்தில் இந்தியாவில் தமிழர்கள் இரண்டாம் தரக் குடிமக்களாகி விடுவார்கள் என்ற ஆபத்தை உணராத அறியாமைக்கு அடையாளமாகும்.

''இந்து ராஜ்யம்'' அமைக்கிறோம் என்பவர்களும் ''இந்தி ராஜ்யம்'' காண்போம் என்கிறவர்களும்தான் இந்திய ஒருமைப்பாட்டுக்கு எதிரிகள் ஆவார்கள்!



பாம்புக்குத் தலையில் விஷம். தேளுக்கு வாலில் விஷம்! பல் இளித்துப் பேசும் துரோகிகளுக்கு உடம்பு முழுவதும் விஷம்!

பாலிலே எவ்வளவு நீரைக் கலந்தாலும் சுவைதான் குறையும் - ஒரு துளி நஞ்சு கலந்துவிட்டாலோ; குடிக்கும் பால் உயிரையே குடித்துவிடும்!



சந்திர மண்டலத்தில் கால் பதித்து வந்து விட்ட சாதனையைப் படித்து மகிழும் காலத்திலே கூட; மாவலி மன்னன் தலையில் வாமனாவதாரம் கால் பதித்த கதையைக் கேட்டுக் கொண்டிருப்பதுதான் முன்னேற்றமா?

சட்டங்கள் சமுதாய மறுமலர்ச்சிக்குப் பயன்பட வேண்டுமே தவிர; சர்வாதிகாரிகளுக்குச் சாமரம் வீசிடப் பயன்படக்கூடாது!




ஒவ்வொரு நெல்மணியையும் மூடியிருக்கிற தோல்
உழவனின் சதையாலும், உள்ளேயிருக்கிற அரிசி
அவனது எலும்பாலும் ஆனது என்பதை
உணர்ந்தால்தான் உழைப்பின் பெருமை புரியும்!

✲

ஒரு சமுதாயம் தனக்கேயுரிய மொழி, கலை,
இலக்கியம், பண்பாடு, வரலாறு ஆகியவற்றை
இழந்துவிடுமானால் - உரமிடாத கழனியில், உரிய
நேரத்தில் நீரும் கிட்டாமல் வளமற்றுத் தலைகாட்டும்
பயிரையும் வேலியற்ற காரணத்தால் ஆடுமாடுகள்
நுழைந்து மேய்ந்தது போல் ஆகிவிடும்.

✲




உலகமகா உத்தமர் என்று ஒருவர் தனனை விளம்பரப்படுத்திக்கொண்டார். அவர் வீட்டு நிலைக் கண்ணாடிக்கு ரசம் பூசப்படவில்லை! காரணம்; அவர் முகம் அதில் தெரிந்துவிடக் கூடாது என்பதுதான்!

உலகத்தை ஏமாற்ற எண்ணுகிறவர்கள்; கடைசியில் தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொண்டதை உணர்ந்து தலை குனிவார்கள்.



மலரின் மீது அமர்ந்துள்ள வண்டே! நீ அந்த மலரை அடக்கி ஆளுகிறாயா? அல்லது எழ முடியாமல் மயங்கிக் கிடக்கிறாயா? அடக்குதல், மயங்குதல் இரண்டுமே தவறு என்பதை அறிந்துகொள் அழகிய வண்டே!

மரம், செடி, கொடிகளை; மலர்களும் இலைகளும் அடையாளம் காட்டுவது போல; மனித இனங் களின் பண்பாடுகளை இலக்கியங்கள் அடையாளம் காட்டுகின்றன.




பாரியின் தேர்க்கால் முறிந்ததால் மலைப் பாதையில் நிறுத்திவிட்டுப் போனான். அந்தத் தேர் மீது ஒரு முல்லைக் கொடி படர்ந்து அவனைக் கடையேழு வள்ளல்களில் ஒருவனாக ஆக்கிவிட்டது!

❋

பத்தாம் பசலி சமுதாயத்தை மாற்றிப் பகுத்தறிவு சமுதாயம் காண்பது, பன்னீர்ப்பூக்கள் பறிக்கும் காரியமல்ல; பாறையைக் குடைந்து பாதை அமைக்கும் செயலாகும்!


❋



புத்தகத்தில் உலகத்தைப் படித்தால்
அறிவு செழிக்கும்!

உலகத்தையே புத்தகமாகப் படித்தால்
அனுபவம் தழைக்கும்!

புகழே; நீ நிழல் - உன்னைப்பற்றிக்
கவலைப்படாதவர்களைத் தொடர்ந்து கொண்டே
இருப்பாய்!



பத்திரிகைச் செய்தி என்றால் படித்தோரும்
பாமரரும் நம்பிய காலம் ஒன்று இருந்தது. ஆனால்
எப்படியும் பணம் சம்பாதிக்கவேண்டுமெனத் துடிக்கும்
சிலர் பத்திரிகைத் துறைக்கே
களங்கம் ஏற்படுத்தி வருகின்றனர்.

✲

பற்று, வெறியாக மாறினால் பற்றி எரியும்
நாடு என்பதற்கு - இந்திக்காரர்களின் மொழி
ஆதிக்க வெறியும், ''இந்து ராஜ்யம்'' அமைக்கத் துடிப்
போரின் மத ஆதிக்கவெறியும் தான்; எதிர்காலத்தில்
எடுத்துக்காட்டுகளாக அமையப்போகின்றன.

✲





ஓவியமாகத் தீட்டப்படும் மலர் வாடுவதில்லை.
ஆனால் வாடிவதங்கி உதிரும் மலர்;
தன் வாழ்வுக் காலத்திற்குள்ளாக வழங்கிடும்
உயர்ந்த மணத்தை ஓவியமலர் வழங்குவதில்லை.
எனவே நீண்ட காலம் வாழ்வது முக்கியமல்ல; வாழ்ந்த காலத்தில் எப்படிப் பயன்பட்டோம் என்பதே முக்கியம்.

✲

ஓட்டை விழுந்த படகை உப்பு கொண்டு
அடைத்து எப்படிக் காப்பாற்ற முடியாதோ;
அதுபோலத்தான் ஊழலில் மூழ்கியவர்களையும்
உதவாக்கரை மனிதர்கள் சிலர் கைதூக்கி
விட்டுக் கரையேற்ற முடியாது!

✲




உண்மையான பக்தர்கள் தங்களை
மட்டுமே ஏமாற்றிக் கொள்கிறார்கள்!
போலி பக்தர்களோ உலகத்தையே
ஏமாற்றுகிறார்கள்!

✲

உச்சி முதல் உள்ளங்கால் வரையில் வகுப்புவாத விஷம் பரவியுள்ள ஆதிக்கக் கூட்டத்தினர்தான்; ஒடுக்கப்பட்ட மக்களின் உயிர்த்தோழனாகத் திகழ்கிற திராவிட இயக்கத்தைப் பார்த்து வகுப்புவாத இயக்கமென வாய்கூசாது கூறுகின்றனர்.

✲



கள்ளிச் செடியில் பூத்துள்ள கவின்மிகு
பூக்களும்; வன்னெஞ்சம் கொண்டோரின்
வாஞ்சை மிகு சொற்களும் ஒன்றேயாகும்.

கடல் தரும் முத்து - அதன் ஒளி அணிவோர்க்கும்,
அதனைக் காண்போர்க்கும் உரியது! அது பிறந்ததால்
கடலுக்குப் பெருமை மட்டுமே உரியது!
தன்னலமற்றவர்கள் எந்த இயக்கத்தில் இருந்தாலும்;
அவர்கள் அந்த இயக்கத்துக்கும் நாட்டுக்கும்
உரியவர்கள்! அவர்களை ஈன்றளித்த வீட்டுக்குப்
பெருமை மட்டுமே உரியது!



பானையைத் தன்னுடைய நெருப்பு நாக்குகளால்
சுட்டுப் பொசுக்குவதாகத்தான் அடுப்பு
எண்ணிக் கொள்கிறது. ஆனால் அந்தச் சூட்டைத்
தனது உடம்பிலே தாங்கிக்கொண்டு
வெண் சோறு தருகிறது பானை!

பாதரசம் நிரம்பிய பாத்திரத்தில்
இரும்புத் துண்டு கூட மிதக்குமே தவிர
உள்ளே அமிழாது என்பார்கள் - அதுபோல
தீயவர் நெஞ்சங்களில் என்னதான் வலிந்து
நற்கருத்தை நுழைத்தாலும் புகாது!



ஒரு நச்சுப்பாம்பு நமது காலைச்சுற்றிக் கொள்ளும் போது நாம் அசையாமல் அப்படியே கல்தூண்போல நின்றுவிட்டால்; அந்தப்பாம்பு நம்மை எதுவும் செய்யாமல்
ஊர்ந்து போய்விடும். அந்தத் திடமான உறுதிதான் இலட்சியவாதிக்கு இலக்கணம்.

ஒரு தனி மனிதரிடம் வெளிப்படுவது அவரது பண்பு!
ஒரு சமுதாயம் வெளிப்படுத்துவது பண்பாடு!
இரண்டுமே
மனிதர்களை அளந்தறியும் வெவ்வேறு வடிவிலான அளவுகோல்கள்தான்!



புராண இதிகாசங்கள் புனிதமான கடவுள்
கதைகள் என்கிறார்களே; அவற்றை அப்படியே
திரைப்படமாகவோ - அல்லது
தொலைக்காட்சியிலோ காட்டுவதற்குத்
தணிக்கைக்குழுவினர் ஒப்புதல் அளிப்பார்களா?

✲

புத்தரை அவதாரமாக்கியது
அவரைப் புகழ்வதற்காக அல்ல!
அவரது கொள்கைகளைக்
குழி தோண்டிப் புதைப்பதற்காக!

✲



வெள்ளத்தோடு மிதந்து செல்வது எளிது!
பிணங்கள்கூட அந்த வேலையைச் செய்யும்;
எதிர்நீச்சல் போட்டு இலக்கினை அடைவதுதான்
ஒரு கொள்கைக்காகத் தன்னை
ஒப்படைத்துக் கொண்டவர்களுக்கு
நிலையான பெருமையாகும்.



வெறுக்கத்தக்க எதையும் சட்ட ரீதியாக தடுப்பதைக் காட்டிலும் மக்களே உணர்ந்து அவற்றைத் தவிர்ப்பதுதான் மிகவும் வரவேற்கத்தக்கது.





எழுத்தாளனே! தாளில் எழுதும்போது உன் தலை குனிந்திருக்கலாம்; ஆனால் தன்மானம் குனியக் கூடாது! அப்போதுதான் எழுதுவதற்காகக் குனியும் உன் பேனா; கூனிக் கிடப்போரையும் நிமிர்ந்து எழுந்திடச் செய்யும்!

✲


எண்ணிக்கை பலத்தை வைத்துக் கொண்டு எருமை மாட்டைப் பசுமாடுதான் என்று சாதிப்பது ஜனநாயகமென்றால்; அதைவிடக் கேலிக்கூத்து வேறொன்றுமிருக்க முடியாது.

✲



வீரனே! நெஞ்சின் ஆழத்திலிருந்து கிளம்பும் பெருமூச்சு உன் குடும்பத்தை எண்ணியதால் ஏற்பட்டது என்றால், அது கொல்லன் துருத்தியிலிருந்து வரும் காற்றுக்குச் சமம். தாயகத்தை எண்ணிக் கிளம்பிய மூச்சென்றால்; அது புயலுக்குச் சமம்.

வீட்டுக்கு விளக்குகளாக, நாட்டுக்குத் தொண்டர்களாகத் திகழ்வோம் என்ற சூளுரையுடன் ஆணும் பெண்ணும் இல்வாழ்வில் அடியெடுத்து வைக்க வேண்டும்.



பணத்தைக் கண்டு பல் இளித்து
பதவியைக் கண்டு பாதம் தொட்டு
பாசம் நேசம் மறப்போர் எல்லாம் - நம்முடன்
பழகியபோதே பகைவர்களாகத்தான்
இருந்திருப்பார்கள்!

✵

பழனி ஆண்டவர்க்குப் பால்குடம் எடுப்பதும், பத்திர காளி கோயிலுக்குத் தீச்சட்டி ஏந்துவதும் அவரவர் உரிமை.

ஆனால் பெரியார், அண்ணா பெயரால் அதனைச் செய்து கொண்டு ''திராவிட இயக்கத்தின் பரிணாம வளர்ச்சி'' என்றால் எங்ஙனம் பொறுத்துக் கொள்ள இயலும்?

✵




''நெஞ்சு பொறுக்குதில்லையே நிலைகெட்ட
மனிதரை நினைந்து விட்டால்''
என்றான் பாரதி! என் செய்வது; நெஞ்சே
இருப்பதில்லையே நிலைகெட்ட
மனிதர்களுக்கு!

நெஞ்சினிக்கப் பேசி வஞ்சிப்போரின்
செயலை விட; நஞ்சினிது!



இமயச் சிகரம் ஏறக் கிளம்பியவன், எறும்பு கடித்து விட்டதென்று அதைப் பிடித்து நசுக்கப் பூதக் கண்ணாடி கொண்டு தேடத் தொடங்குவானாயின்; அவன் அடிவாரத்தை விட்டு நகரவே மாட்டான்!

இராமாயணம் நடந்த கதையே அல்ல; ஆரிய திராவிடப் போராட்டத்தை அடிப்படையாக வைத்து புனையப்பட்ட கதை என்று பண்டித நேருவே எழுதியிருக்கும்போது; பிறகு ஏன் இராமன் பிறந்த இடம் எது என்ற சர்ச்சையில் நாடு காடாக வேண்டும்?




சிலர் இருமுறை துறவறம் பூணுகிறார்கள்!
எப்படி? முதலில் இல்லறத்தைத் துறந்து;
துறவறம்! பிறகு துறவறத்தைத் துறந்து
இல்லறம்!

✵

சிறைக்குச் செல்வது முதல் இரவு அனுபவத்தைப் போன்றது. சிறையில் வாழ்வது தாயின் கர்ப்பத்திற்குள் இருப்பதைப் போன்றது. சிறையிலிருந்து விடுதலை பெறுவது இரத்த சேமிப்பு நிலையத்திலுள்ள இரத்தம் காயமடைந்த போர் வீரனின் உடலுக்குள் பாய்ந்தோடுவது போன்றது, இத்தனையும் இலட்சியவாதிக்கு!

✵




படையல் வைக்கும் பண்டங்களையெல்லாம்
ஆலயத்தில் உள்ள விக்ரகம்
சாப்பிடுவதாயிருந்தால் பிறகு பக்தன் ஒரு
பருக்கையைக் கூட அதன் கண்ணில்
காட்டமாட்டான்.

✵


பனைமரம் தனியாக நின்றால்தான் பார்ப்பதற்குப்
பரிதாபமாக இருக்கும். ஆனால்
ஆலமரம் தனியாக நின்றாலும்
அணிதேர்ப் புரவி ஆட்பெரும் படையுடன்
மன்னர்க் கிருக்க நிழல்தரும் என்பது
ஆன்றோர் வாக்கு!

✵



வயிற்றுக்கு உணவும் அறிவுக்குக் கல்வியும்
எல்லா மக்களுக்கும் கிடைக்காத ஒரு நாட்டில்
பூஞ்சோலைகள், பொழியும் அருவிகள்,
ஆலைகள், சாலைகள்,
ஆலயங்கள், மாட கூடங்கள்
இவற்றை மட்டும் வைத்து பொருளாதார
வளர்ச்சியைக் கணக்கிடுவது நம்மை நாமே
ஏமாற்றிக் கொள்வதாகும்.

வளைந்து நெளிகின்ற தன்மை நாக்கிற்கு
உண்டு. எதிரிகளுக்கு நேரே அதனை வளைய
விடாமல் நிமிர்த்தி இயக்குகிற சக்தி வீரனது
உள்ளத்திற்கு உண்டு.



மூக்கு தாங்குகிறது. கண்கள் காண்கின்றன. அதனால் ''மூக்குக் கண்ணாடி'' எனப் பெயரிட்டு அழைக்கின்றார். அந்தக் கண்ணாடியின் இரு புறத்துப் பிடிப்புச் சட்டங்களையும் விழாமல் காத்துக்கொண்டிருப்பது காதுகள் அல்லவா? ஆனால், அவைகள் தங்களை இருட்டடிப்புச் செய்துவிட்டார்களே என்று கவலைப்படாமல் கடமையைச் செய்து கொண்டிருக்கின்றன; சில இயக்கங்களின் தொண்டர்களைப்போல!

மூடியுள்ள தோல் முழுவதும் முள் இருப்பதாலேயே ஊமத்தங்காய், பலாக்கனி ஆகிவிடாது.
பணமும் பதவியும் இருப்பதாலேயே எல்லோரும் அறிவாளிகளாகி விட முடியாது.



இலக்கியம்; பண்பாட்டைப் பிரதிபலிக்கும்
கண்ணாடி!
இலக்கணம் அந்தக் கண்ணாடியின் நான்கு
புறமும் போடப்படும் சட்டம்!

✵

''இந்து ராஜ்யமே'' தனது குறிக்கோள் என்கிறது
பா.ஜ.க.
''இந்திக்காரர் ராஜ்யமே'' தன்து குறிக்கோள் என்கிறது
- இ.காங்கிரஸ்
இரண்டு குறிக்கோள்களுமே இந்திய நாட்டின்
ஒற்றுமையை
ஊனப்படுத்தக் கூடியவை என்கிறது தி.மு.க.

✵



கோடை வெயிலில் நடந்து போகும்போது குடை கையில் இருப்பதுபோல; துன்பங்களைக் கடந்து செல்லவும் நெஞ்சில் உறுதி எப்போதும் இருந்திட வேண்டும்.




கோட்டானைக் குயில் என்றும்; குயிலைக் கோட்டான் என்றும்; பெரும்பான்மையோர் சொல்லிவிடுவதால் - கோட்டான் குயிலாகிவிடாது! குயிலும் கோட்டானாகி விடாது!






நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் உயிரோடு இருக்கிறார் என்று ஒருசாராரும் - இல்லை; இறந்துவிட்டார் என்று மற்றொரு சாராரும் வெகு நாட்களாகக் கூறிவருகிறார்கள். இன்னும் பல நூற்றாண்டுகளுக்குப் பிறகுகூட அவர் வாழ்ந்துகொண்டுதானிருப்பார். உண்மையான இலட்சிய உறுதி படைத்தவர்களுக்குச் சாவு ஏது?

நமது இலட்சிய வழியில் குறுக்கிடும் முட்டுக்கட்டைகளைக் கண்டு பதறாமல்; அவைகள்தான் நமது பாதையை ஒழுங்குபடுத்தவும் நமது பயணத்தை உறுதிப்படுத்தவும் உதவுகின்றன என்று கருதிக் கொள்ள வேண்டும்.



''வானவில்'' - மழையை எதிர்பார்த்து
பூமிப்பெண் பிடித்துக்கொள்ளும் வண்ணக்குடை!
ஆனால், மழை பொழியும்போது
கோடிக்கணக்கான ஓட்டைக்
குடிசைகளுக்கு அந்தக் குடையால்
எந்தப் பயனும் இல்லை!

வாய்ப்புக்களையும் பதவிகளையும் உரிமைகளையும்
விலை கொடுத்து வாங்குகிறவர்கள்; அவற்றுக்காக
செலவழித்த பணத்தை எடுக்க; இந்த
சமுதாயத்தையே ஊழலென்னும் புற்று நோய்க்கு
இரையாக்கி விடுகிறார்கள்.



யானை, தன் துதிக்கையைத் தூக்கி ஓங்கி அடிக்கும் வரையில் - அதன் மத்தகத்தின்மீது ஒரு குருவிகூட உட்கார்ந்துகொண்டு; அது யானையை அடக்கி விட்டதாகப் பெருமைப்பட்டுக் கொள்ளலாம்.

✲

யானையை அடக்கப் பாகன் கையில் அங்குசம்! எண்ணிக்கையில் அதிகமான மக்களை மேலும் மேலும் ஒடுக்க ஆதிக்கக்காரன் கையில் பத்திரிகைத்துறை!

✲




''**வா**னத்துக்கு நீலவண்ணம் பூசியது யாராக இருக்கும்?'' என்று ஒருவன் கேட்டான்.

''உப்பை அள்ளிக் கடலில் கரைத்தானே அவனாகத்தானிருக்கும்'' என்று இன்னொருவன் பதில் அளித்தான்.

கேட்டவனும் பதில் அளித்தவனும் பைத்தியங்களாக இருக்கவேண்டும்; அல்லது கவிஞர்களாக இருக்க வேண்டும்.

வாய்ச் சொல் வீரர்களிடம் வாய்மையும் இருப்பதில்லை; நெஞ்சில் தூய்மையும் இருப்பதில்லை!




கண்ணுக்குள் இருப்பதற்குப் ''பாவை'' என்றும் ''பாப்பா'' என்றும் பெயர் சூட்டி அழைத்திடக் காரணம்; அந்த இருவரையும் தனிப்பரிவுடன் பார்க்க வேண்டும் என்பதற்காகத்தான்!

✲

கடவுள்தான் கனவில் வந்து என் கஷ்டத்தைப் போக்கிக்கொள்ள அவர் நகைகளைக் களவாடிக் கொள்ளுமாறு கட்டளையிட்டார் என்று எந்த அர்ச்சகராவது சொன்னால் நீதிமன்றம் அவரைத் தண்டிக்காமல் விட்டுவிடுமா? ஆனால் நமது புராணங்களில் இப்படிப் பல நிகழ்ச்சிகள் இருக்கின்றனவே; அது எப்படி?

✲



தன்னைப் பாதுகாத்துக் கொள்ள ஆமைக்கு
ஓட்டைப் படைத்தான் ஆண்டவன் என்கிறார்களே;
அவன் ஏன் நடைபாதையில் வாடும்
ஏழைக்கு ஒரு வீட்டைப் படைக்கவில்லை?

தனது முயற்சியையும் மீறி ஏற்படும்
விளைவுகளுக்குக் காரணம் கண்டுபிடிக்க
முனையாத மனிதன், அந்தப் பழியைத்
தூக்கிப்போட ''விதி'' என்ற சொல்லைக்
கண்டுபிடித்துச் சோம்பேறி ஆகிவிட்டான்.



காதலர்கள் ஒருவரையொருவர் பிரிந்திருக்கும் துன்பத்திலும் ஓர் இன்பம் உண்டு; நடந்த நிகழ்வுகளை அசை போடுவதாலும், மீண்டும் நடக்க இருப்பவைகளை ஆவலுடன் எதிர்பார்ப்பதாலும்!

✲

கடவுள் வரம் கொடுத்தாலும் பூசாரிகள் வரம் கொடுப்பதில்லை என்பது சரியல்ல! எப்போதுமே பூசாரிகள்தான் வரம் கொடுப்பதாகச் சொல்லி மக்களை ஏமாற்றுகிறார்கள்.

✲



ஒரு குட்டிக் கதை! சிறையில் ஒரு அரசியல் கைதிக்கு நாவல்கள், இலக்கியங்கள் படிப்பதில் நாட்டமில்லை, இலட்சியத்துக்காக உயிர்விட்ட வீரர்களின் வரலாறுகளையும் சிறைக்கோட்டங்களில் சித்ரவதை அனுபவித்த தியாகிகளின் வரலாறுகளையும் தவிர வேறு எந்த நூலையும் அவர் கையால் தொடுவதில்லை. ஒரு நாள் அவரை சிறைக் கொட்டடியில் காணவில்லை. சிறைச்சாலை பரபரப்பாகியது. நன்றாக விசாரித்த போது அவர் மன்னிப்பு கேட்டுக் கொண்டு வெளியே போய்விட்டார் என்று செய்தி கிடைத்தது. எப்படி கதை?



கைரேகை பார்ப்பதால் பலன் உண்டா?
நிச்சயமாக உண்டு; காவல் துறையின்
புலனாய்வாளர்களுக்கு!

கரையுடைத்துச் செல்லும் காட்டாற்றுப்
பெருவெள்ளம் கழனிகளுக்குப் பயன்படாதது
மட்டுமல்ல; கழனிகளைப் பாழாக்கியும் விடும்!
அதைப்போலவே ஒழுங்கும் கட்டுப்பாடும்
காத்திட மறுப்பவர்களால் சமுதாயத்திற்கு
ஒரு பயனுமில்லை!




தனிமையைப் போன்ற ஒரு கொடுமையும்
இல்லை; அதைப் போல் ஓர் உண்மையான
நண்பனும் இல்லை!

✲

தமிழகத்தில் சமுதாயத்தின் கீழ்த்தட்டில் தள்ளப்பட்டோர்
முன்னேறுவதற்கு மட்டுமே சமூகப் பிரிவுகள்
அடையாளங்களாகப் பயன்படுத்தப்பட
வேண்டுமேயல்லாமல்; நாம்
அனைவரும் தமிழர்கள் என்ற உணர்வை ஒரு போதும்
இழத்தலாகாது!

✲



எனக்கு மிகவும் பிடித்த
பொன் மொழிகளில் ஒன்று;
''நீண்ட தூரம் ஓடினால்தான் அதிக
உயரம் தாண்ட முடியும்'' என்பதாகும்!

ஏசுபிரான் ஒரு சிலுவையைத்தான் சுமந்தார்.
இன்று உலக முழுவதும் பல கோடி சிலுவைகள்
அந்த தியாக சீலரின் திருஉருவைச்
சுமந்து கொண்டு நிற்கின்றன!




ஏழையின் தோள்மீது ஏறி உட்கார்ந்துகொண்டு அவன் தோள் எலும்பு, தனது தொடையில் குத்துகிறது என்பதுதான் இந்த நாட்டுப் பணக்காரனின் வேதனைக்குரல்!

✵

''ஏழை'' என்ற சொல்லை இந்தியாவில் ஒழிக்க முடியுமா?

ஏன் முடியாது? பன்மொழிப் பண்டிதர்களை அழைத்து மாநாடு கூட்டி, ''பணக்காரன்'' என்பதற்கு ''பஞ்சை, பராரி'' என்றும் - ''ஏழை'' என்பதற்கு ''செல்வச் சீமான்'' என்றும் அர்த்தம் எழுதச் சொல்லி அகராதிகளை மாற்றிவிட்டால் போகிறது!

✵



தாலாட்டுப் பாடல், குழந்தைகளைத் தூங்க வைப்பதற்காக மாத்திரமின்றி; அவர்களை வீரமும் உறுதியும் கொண்ட விவேகிகளாகவும் உருவாக்கிடப் பயன்பட வேண்டும்.

❋


தாயின் மடியில் தமிழ்ப்பால் உண்டு, மழலை மொழியையும் தமிழால் பேசி; மண்ணுக்கு உடல்-தமிழுக்கே இந்த உயிர் என்றெல்லாம் முழங்குகிறவர்களின் வீடுகளில்கூட மணவிழா என்றால் வடமொழிக்கு வளைந்து வணங்குவதுதான் மரியாதை எனில்; இந்தத் தமிழ்ச்சாதி தலைநிமிர்வதுதான் எப்போது?

❋



மரக்கட்டைக் கால்களில் நின்று கொண்டு
பொய்க்கால் குதிரையில் உடம்பை நுழைத்துக்
கொண்டவர்கள் எல்லாம் உண்மையான ராஜா, ராணிகள்
ஆகிவிட முடியாது. இது இன்றைய அரசியல்
தலைவர்கள் சிலருக்குப் பொருந்தும் உவமை!

மடாலயங்கள் விஷத்தடாகங்கள் என்பதையும் -
அங்குள்ள மகான்கள் மனித மிருகங்கள்
என்பதையும் - வெளிச்சம் போட்டுக் காட்டிய
பிறகும்; விழிப்படையாத
சமுதாயத்திற்கு ''விடிவுகாலம்'' என்பது
வெறுங்கனவேயாகும்.



விண்வெளியில் நீந்தும் முகில்கள்; அடடா!
எத்தனை வடிவங்கள்தான் எடுக்கின்றன!
இந்த வித்தையை அவைகள் மனிதர்கள்
சிலரிடம்தான் கற்றிருக்க வேண்டும்.



விடமாட்டேன் என்று ஒரு பொறுப்பைக் குரங்குப்
பிடியாகப் பிடித்துக் கொண்டிருப்பவர்களைத்தான்
மிரட்டிப் பணியவைக்க முடியும்! விட்டால் போதும்
வேறு பணி இருக்கவே இருக்கிறது என்றிருப்பவர்கள்
எந்த மிரட்டலுக்கும் அஞ்சமாட்டார்கள்!





மனிதன் மரத்தை வெட்டுகிறான். அதனால்தான்
அந்த மரம் அவனைப் புதைக்கும் சவப்பெட்டியாகவும்
எரிக்கும் விறகுக் கட்டையாகவும் மாறிப் பழி
தீர்த்துக் கொள்கிறது போலும்!

மறைந்த பெரியவர்களுடன் தங்களைத் தொடர்பு படுத்திக்கொண்டு கடந்த கால நிகழ்வுகளைக் குறிப்பிடும் பொழுது; அவர்கள் மீண்டும் உயிரோடு வந்து மறுக்க மாட்டார்கள் என்ற தைரியத்தில் - ஆதாரங்கள் எதுவுமின்றி பேசுவதும் எழுதுவதும் மக்களை ஏமாற்றும் மோசடியாகக் கருதப்படும்.




பரமசிவனுக்கும் ஐந்து தலைகள் - பிர்மாவுக்கும் ஐந்து தலைகள்! அதனால் பார்வதிக்கே அடையாளம் தெரியாமல் போய் விபரீதம் விளைந்து விட்டது! எனவே பிர்மாவின் தலைகளில் ஒன்றை சிவன் கிள்ளிவிட்டார்! உடனே சிவனை ''பிர்மஹத்தி'' பிடித்துக் கொண்டது! இப்படி எழுதப்பட்ட புராணங்களை ஏற்றுக் கொண்டால் அவன் பக்தன்; ஏற்றுக் கொள்ளாதவர்கள் பாபிகளா?

✲

பச்சைக் கொடியல்ல; பச்சைப் பாம்பு எனத் தெரிந்த பிறகும் - இச்சை கொண்டு தடவிப் பார்ப்பவர்கள் கண்ணிருந்தும் குருடர்கள்! மூளையிருந்தும் மூடர்கள்!

✲




தன்னை அழித்துக் கொண்டு ஒளி வழங்குகின்ற மெழுகுவத்தியிடமாவது; மனிதன் வாழ்க்கை இலக்கணத்தைக் கற்றுக் கொள்ளக்கூடாதா?

✵

தன்னலமற்ற பொது வாழ்க்கை என்பது தாழம்பூவின் மணத்தைத் தொலைவிலிருந்து நுகர்வது போல அல்ல: அந்தப் பூவை எதிர்ப்புறமாகத் தடவுவது போல!

✵




விவேகமெனும் வெள்ளி முளைத்து,
சாதிப்பித்து எனும் சனி
தொலைந்தால்தான்;
சமத்துவம் எனும் ஞாயிறு தோன்றும்!

✲


விலாங்கு மீன், பாம்புக்குத் தலையைக் காட்டியும்
மீனுக்கு வாலைக் காட்டியும் தப்பித்துக் கொள்ளக்கூடும்!
ஆனால் வீசப்படுகிற வலைக்கு எதைக்காட்டி,
அது தப்பிக்க முடியும்?

✲



"நல்லகாலம் பிறக்குது" என்று
குடுகுடுப்பைக்காரன் கூவுவதற்கும்;
அதையே ஆரூடக்காரன் கூறுவதற்கும்
ஒரே மதிப்புத்தான்!

நமது இலட்சியப்பாதையில் நடைபோட
வருவோரைத் தடையின்றி வரவேற்போம்; ஆனால்
அவர்கள்தான் இந்தப் பாதையையே அமைத்தவர்கள்
போலக் காட்டிக் கொள்ளும்போது வாய்விட்டுச்
சிரிப்போம்!




கொள்ளைக்காரனிடம் பொருளைப் பறிகொடுக்கும்
மனிதன் "அட கடவுளே!" என்று அலறுகிறான்!
பாவம்; கடவுளே கணக்கில்லாத
பொருள்களைப் பறி கொடுக்கிறாரே - அவர் யாரிடம்
போய் அழுவது?




இரண்டு தூய உள்ளங்களை இணைப்பதுதான் காதல்! உடல்களை இணைப்பது ஒருவகையான் வெறி! காதலை முதுமையிலும் சுவைக்க முடியும்; காமவெறியின் ஆயுளோ உடலின் வலிவோடு முடிந்துவிடும்!

இந்தியாவில் பெரும்பான்மை - சிறுபான்மை என்ற இரு பிரிவினர் மாத்திரமல்ல; இன்னொரு பான்மையும் இருக்கிறது - அதாவது இந்த இருபான்மையினரையும் வாழவிட அனுமதிக்காத விஷப்பான்மை!



அளவு கடந்து ஆணவம் கொள்வது;
அளவு கடந்து அடங்கிப் போவது -
இரண்டுக்கும் ஒரே மாதிரி முடிவுதான்!

அஞ்சா நெஞ்சமெனும் இரும்புத்துண்டு,
அடக்குமுறையெனும் உலைக்களத்து
நெருப்பில், பழுக்கப் பழுக்கக்
காய்ச்சப்படும் போதுதான்; அது
படைக்கலனாகவே உருவெடுக்கிறது.



தங்கத்தால் நாக்கு செய்து மாட்டினாலும்
நாயின் இயல்பு, குரைக்கத்தான் செய்யும்!

✡


தரைநோக்கிக் குனிந்து கொட்டுகின்ற
தண்ணீரே! நீ நெருப்பைப் போல் நிமிர்ந்து
ஆகாயத்தை நோக்கி ஆர்ப்பாட்டம்
செய்வதில்லை! ஆனால் நீ வெகுண்டெழுந்து
வெள்ளமாகப் பெருகி எத்தனை நகரங்களை,
நாடுகளை, கண்டங்களை விழுங்கியிருக்கிறாய்
என்பதை, தலை கனத்தோர்க்கு ஞாபகம் செய்
தண்ணீரே!

✡




அடிமையைச் சவுக்கால் அடிக்கச் செய்து
அவன் சிந்தும் ரத்தத்தின் நிறத்தையும்;
தான் அணிந்துள்ள பவளத்தின் நிறத்தையும்
ஒப்பிட்டுப் பார்ப்பதில்
பண்ணைக்காரருக்கு ஓர் இன்பம்!
அதுவும் - பாட்டாளி வர்க்கம் விழிக்கும் வரையில்!

அணு அளவுகூட இதயமில்லாத ஒருவருக்கு
ஆகாயமளவு மூளையிருந்து என்ன பயன்?



ஒரு மெழுகுவத்தியைக் கொளுத்தினால் அதைக் கொண்டு ஆயிரம் விளக்குகளைக் கொளுத்த முடியும். அறிவொளி பெற்ற ஒரு பெண்ணாலும் அது முடியும்.


ஒவ்வொரு தனி மனிதனின் நல்லொழுக்கமும் இணைந்த தொகுப்புத்தான் சமுதாய நெறிமுறை எனப்படுகிறது. அதற்காக ஒருசில தனி மனிதர்களின் ஒழுக்கக் குறைவுகளை வைத்து சமுதாயத்தையே எடை போட்டுவிட முடியாது.



வீரம், வெற்றி முகட்டை எட்ட முடியாது;
விவேகம் துணைக்கு வராவிட்டால்!

வீழ்வது நாமாக இருப்பினும்
வாழ்வது தமிழாக இருக்கட்டும்!

வீழ்ந்துவிட்ட கட்டபொம்மன்தான்
சரித்திரத்தில் எழுந்து நிற்கிறான்!
அவனை வீழ்த்திய வெள்ளைக்காரனைச்
சரித்திரத்தில் தேடித்தான் கண்டுபிடிக்கிறோம்!







தேனீக்களைப் பார்த்துப் பொருளீட்டக் கற்றுக் கொள்கிறான் வணிகன்.

மலருக்கு மலர் தாவிடக் கற்றுக் கொள்கிறான் காமுகன்.

உரிமை பறிப்போரைச் சூழ்ந்து எதிர்க்கக் கற்றுக் கொள்கிறான் இலட்சியவாதி!

தன்னைப் புதைத்துக் கொள்ளத் தயாராக ஒரு குழிதோண்டி வைத்திருப்பவன்தான்; தான் ஏற்றுக் கொண்ட கொள்கைக்குக் குழி தோண்டுவான்!

பேராசிரியர் அன்பழகு நூல் நிலையம் சென்னை-18 தமிழ்நாடு அறிவாலயம்



பொதுவாழ்வில் இருப்போர் பத்திரிகைகளை நிலைக்கண்ணாடிகளாகக் கருத வேண்டும். அவைகளும் ரசம் பூசிய கண்ணாடிகளாக இருந்திட வேண்டும். ''விரசம்'' பூசிய கண்ணாடிகளாக இருத்தல் கூடாது!

பொறுமையில் பலமும் - பொறாமையில் பலவீனமும் பெருகிடும்!




உண்மையில் உறங்குபவரை மென்மையாகத் தட்டி எழுப்ப வேண்டும். உறங்குவது போல் நடிப்பவரை; தலையில் குட்டி எழுப்புவது தவறல்ல!

✵

''உன்னையே நீ அறிவாய்!'' என்று சாக்ரடீஸ் உதிர்த்த வாசகத்திற்கு விளக்கம்; முதலில் உன்னைத் திருத்திக்கொண்டு பிறகு உலகைத் திருத்த முயற்சி செய் - என்பதுதான்!

✵



கடலில் அலைகள் ஓய்ந்த பிறகு நீராடலாம் எனக் காத்திருப்பதும், பிரச்சினைகள் தீர்ந்தபிறகு பொதுவாழ்வுக் கடமைகளை ஆற்றலாம் எனக் கருதுவதும் ஒன்றுதான்!

❋

கடவுளானாலும், கடவுளின் தூதர்கள் எனத் தம்மைக் கூறிக்கொள்ளும் மாயாவிகளானாலும் காவல் துறையினர்தான் அவர்களைக் காப்பாற்ற வேண்டியிருக்கிறது என்கிறபோது; அவர்களிடம் அறிவுள்ள மக்களுக்கு மதிப்பும் மரியாதையும் எப்படி ஏற்படமுடியும்!

❋



ஆணும் பெண்ணும் போட்டி போட்டுக்கொண்டு ஆடை குறைத்துப் பொது இடங்களில் திரியும் காலத்தை ''நவநாகரீகக் காலம்'' என்று பெயரிட்டு அழைத்தால்; இந்தப் பெயர் காட்டுமிராண்டிக் காலத்துக்கும் பொருந்தாதோ?

ஆற்றில் புதுவெள்ளம் வேகமாக வரும்போது கலங்கலாகத்தான் இருக்கும். அதற்காக ஏற்கனவேயுள்ள தெளிந்த நீர் புதுவெள்ளத்தைப் புறக்கணித்தால் ஆறே வறண்டு போய்விடும்.



ஆட்டைத் தோளில் போட்டுக் கொண்டு அதனைக்
காடுமேடுகளில் தேடித் திரிபவருக்கும்;
ஆண்டவனை ஆலயங்களில் தேடி
அலைபவர்களுக்கும் என்ன வேறுபாடு?

✲

ஆத்திரம் அறிவை மறைப்பது
மட்டுமல்ல;
அழிவையும் விரைவுபடுத்தும்!

✲



இரண்டு தாய்களின் வயிற்றில் கருத்தரித்துப் பிறக்கும் குழந்தை இசை! இன்பத்திலும் இசை பிறக்கிறது - துன்பத்திலும் இசை பிறக்கிறது!

✲

இயற்கை, பூமிக்குப் பிடிக்கும் குடைதான் வானம் என்கிறான் கவிஞன்! அப்படியானால் பூமி மழையிலும் நனைகிறது - வெயிலிலும் காய்கிறதே; அது ஏன்? ஓகோ; புரிகிறது! வானம், பூமிக்குக் குடையல்ல; இயற்கை அளித்த கொடை!


✲



நேற்று பெய்த மழையில் இன்று முளைத்த
காளான்கூட ஈ, எறும்பு, புழு பூச்சிகளின்
பார்வையில் வெண்கொற்றக் குடைதான்!


நேற்று என்பது நடந்ததை நினைத்துப் பார்ப்பதற்கு!
இன்று என்பது நாளைக்குப் பார்த்துக் கொள்ளலாம்
என்றில்லாமல் கடமையைச் செய்வதற்கு!

நறுமண மலர்கள்; சேற்றிலும் சகதியிலும்கூட
தோன்றலாம்! ஆனால் மனிதர்களுக்கிடையே
நல்லிணக்கம் எனும் மலர் தூய்மையான இதயத்திலே
தான் தோன்றிட முடியும்!



வாழ்க்கையில் திரும்பிப் பார்த்துப்
பயணத்தைத் தொடரும்போதுதான்;
அனுபவங்கள் வழித்துணைக்கு
வருகின்றன!

வாய்மை, மானங்காக்க
வாளைச் சுழற்றும்!
பொய்மையோ மானமிழந்து
வாலைக் குழைக்கும்!



பாமரத் தன்மை நீங்காத வரையில்
பாஞ்சாலிகள்; கண்ணகிகளாகத்தான்
பாராட்டப்படுவார்கள்!

✲


“**பா**வம் செய்கிறோமே; நரகத்துக்குப்போக
வேண்டுமே” என்றோ, அல்லது அடுத்த பிறவியில் நாய்,
நரி, கழுதைகளாகப் பிறக்கவேண்டுமென்று பயந்தோ;
ஒரு மனிதன் பாபம் செய்யாமல் இருந்து விடுகிறானா?
பாபத்தையும் செய்துவிட்டு பாப விமோசனத்துக்கான
பல ஏற்பாடுகளையுமல்லவா செய்து
வைத்துக் கொள்கிறான்!

✲



பேச்சாற்றல் இல்லாமல் செயலாற்றல் மட்டும்
கொண்டவர்கள்; முடியில்லாத தலைக்கு ஒப்பானவர்கள்!
செயலாற்றல் இல்லாமல் பேச்சாற்றல்
மட்டும் கொண்டவர்கள் தலையில்லாத முடிக்கு
ஒப்பானவர்கள்! (முடி என்பது மகுடத்தைக்
குறிப்பிடுவதாகும்)

பொய்யில் வாழ்வது என்பது புதையல்
எடுத்தது போல இருக்கும்! போகப்போக
அதுவே அந்த வாழ்வுக்குப் புதைகுழி
ஆகிவிடும்!




பல்லாயிரம் ஆண்டுகளாக வாழ்ந்து வருகிற மக்கட் கூட்டத்தின் பண்பாட்டிலிருந்து தோன்றுவதே இலக்கியம். ஒரு சமுதாயத்தைப் பண்பட்ட சமுதாயமா என அறிந்திட இலக்கியமே அளவுகோல்.

✲

பல நூற்றாண்டுகளாகப் பள்ளத்துப் புழுதியில் தள்ளப்பட்டிருக்கும் சமுதாயம், தலைதூக்கி எழுந்து மேலே வரத்துடிக்கும்போது; அதன் தலையில் காலை வைத்து அழுத்துவோம் என ஒரு கைப்பிடிக்குள் அடங்கும் எண்ணிக்கையுள்ள கூட்டம் கூச்சலிட்டால்; அது சிங்கத்தின் முழக்கமல்ல - சிறு நரிகளின் ஊளை!


✲



சுயநலம் என்ற ரசம் பூசிய கண்ணாடியில்
நம்மை மட்டுமே பார்த்துக்கொள்ள முடியும்.
ஆனால் அந்த ரசம் பூசப்படாத கண்ணாடி வழியாக
வெளி உலகத்தையும் பார்க்க முடியும்.

சந்தர்ப்பவாதிகளின் கையில் சிக்கினால்
சமத்துவம், சமதர்மம் என்ற தத்துவங்கள் கூட
சத்தற்றுப் போய்விடக் கூடும்.

சரித்திர உண்மைகளை மறைப்பவர்களையும்
திரிப்பவர்களையும் நிகழ் காலம் கூட மன்னித்து விடலாம்.
ஆனால் எதிர்காலம் அவர்களைக் காரி உமிழும்!




கடித்துத் தின்பதினாலோ, இடித்தும் அரைத்தும் சாறுபிழிவதினாலோ, கரும்பின் சுவை கசப்பாக மாறிவிடுவதில்லை! இனிய இயல்புடையாரின் பண்பினை, ஏச்சுக்களும் - பேச்சுக்களும் எதுவும் செய்து விடுவதில்லை!

❋

''கடமையைச் செய்துவிட்டுக் கருணையை எதிர்பார்க்கும் தொழிலாளி'' என்கிற நிலைமை மாறி உரிமையைப் பெறுகிறான் என்ற நிலைமை உருவாக வேண்டும்.

❋




''மா**ஜிக்**'' நிபுணர்கள் செய்துகாட்டுகிற தந்திரங்களை
சில மாயாவிகள் மந்திரங்கள் என்ற பெயரால்
செய்து காட்டி ஊரை ஏமாற்றுகிறார்கள்.
அதற்கு அவர்களுக்குக் காவியும், கமண்டலமும்.
கடவுளின் பெயரும் தேவைப்படுகிறது.

✲

மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக்
கொளுத்துவோம் என்றான் பாரதி!

ஆனால் வரதட்சணைக் கொடுமை
மாதர்களையே அல்லவா கொளுத்திக்
கொண்டிருக்கிறது!

✲




படகு ஓட்டையாகி விடும்போது;
நீந்தத் தெரியாதவர்கள் பத்துபேர்;
துணைக்கு இருந்துதான் என்ன பயன்?

பற்று என்பது ஒன்றின் மீது ஆழ்ந்த அன்பு கொள்வது;
அதனைக் காத்திட தியாகம் கூட செய்வது.

வெறி என்பது அப்படியல்ல; தான் விரும்புகிற அல்லது
பற்றுக் கொண்டுள்ள ஒன்றைத் தவிர, அதன்
ஆதிக்கத்தைத் தவிர
வேறெதுவும் அதுபோல இருக்கவே கூடாது; இருந்தால்
அதனை அழித்தொழிக்க முனைவதுதான் வெறி
என்பதாகும்.

இந்த வெறி எங்கு தோன்றினும் வீழ்த்தப்பட வேண்டும்.



கருடனைப் பார்த்து விமானம் பறக்க விடக் கற்றவன் விஞ்ஞானி!
''கிருஷ்ணா - கிருஷ்ணா'' என்று தவடையில் போட்டுக் கொள்பவன் அஞ்ஞானி!

❋


கடவுளை அசிங்கப்படுத்துகிற ஆத்திகர்களைவிட;
கடவுளே இல்லை என்கிற நாத்திகர்கள் மேலானவர்கள்!

❋



மத்தாப்பு கொளுத்துவது போல் யாரும்
எரிமலைக்குத் தீ வைப்பதில்லை!
நாளுக்கு நாள் கனன்று கொண்டிருக்கும்
நெருப்புக் குழம்பு; தானாகவே குமுறிக் கிளம்புகிறது!
மக்கள் புரட்சியும் அப்படித்தான் பல நாடுகளில்
உருவாகியிருக்கிறது!

மக்களாட்சி முறை என்பது ஒரு மலர்த்தோட்டம்.
அதிலே எத்தனை வகையான கருத்துக்கள் வேண்டு
மானாலும் வண்ண மலர்களாகப் பூத்துக்
குலுங்கிடலாம்.




சேதாரத்தைப் பற்றிக் கவலைப்படாமல் கரடு முரடான பாறையைச் செதுக்கிக் கவின்மிகு சிற்பம் காண்பது போன்றதுதான்; மூடநம்பிக்கைகளை ஒழித்து முன்னேறிய சமுதாயம் காண்பதும் ஆகும்.

செருப்பு கடித்துவிட்டதே என்று அதை யாராவது திருப்பிக் கடிப்பார்களா? பொது வாழ்க்கையில் அதுபோல விதிவிலக்கு அளிக்கப்படவேண்டிய நபர்களும் உண்டு என்பதை மறந்துவிடக் கூடாது!



ஒவ்வொரு தனிமனிதனையும் திருத்துவதும்
அவன் நலம் காப்பதும் தனித்தனி செடி
கொடிகளுக்குத் தண்ணீர் ஊற்றுவது போல!
மொத்த சமுதாயத்தையும் திருத்தி அதன் நலம்
காப்பது பயிர் விளையும் கழனிகளுக்குத்
தேவையான மழை பொழிவது போல!

ஒருவரை ஏமாற்றிக் கொண்டிருக்கிறோம் என
எண்ணிச் செயல்பட்டுக் கொண்டிருப்பவர்;
இறுதியில் பெரிய ஏமாற்றத்துக்கு
இரையாக நேரிடும்.




துணிவு இருந்தால் துக்கம் இல்லை!
துணிவு இல்லாதவனுக்கு, தூக்கம் இல்லை!

✲

தி.மு.க. ஆட்சியை ஆதரித்தும் அது நிலைத்து நீடிக்க வேண்டுமென்று விருப்பம் தெரிவித்தும் உரையாற்றிய தந்தை பெரியார் அவர்கள்; தி.மு.க.வில் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பதில் முதலிரண்டையும் கூட பின்னுக்குத் தள்ளிவிட்டு மூன்றாவதாக உள்ள 'கட்டுப்பாடு' என்பதைத்தான் முதலாவதாக அந்தக் கழகம் கடைப்பிடிக்க வேண்டுமென்று குறிப்பிட்டதை நான் கல்மேல் செதுக்கிய வாசகமாகவே இன்றைக்கும் கருதுகிறேன்.

✲



பொன் வேண்டேன், பொருள் வேண்டேன்,
மண்ணாளும்
மகராசர் தருகின்ற புகழ்வேண்டேன் எனக்கூறித்
துறவறம் பூண்ட மாதவி சிறந்தவளா? பொன்
வேண்டும்-பொருள் வேண்டும்-மண்ணாளும் மகராசர்
தருகின்ற புகழும் வேண்டும் என வாய் பிளக்கும்
மடாலயங்கள் சிறந்தவைகளா?

✡

பெற்றோர் மகிழ்ந்திடப் பிறந்து;
பிறந்த பொன்னாடு அழுதிடச் சாவதைவிட
வாழ்க்கைக்கு வேறு சிறப்பும் உள்ளதோ?

✡




பற்களை முத்துக்கள் என்று பாராட்டுகிறோம். அவைகள் உதிர்ந்துவிட்டால் ஆரமாகக் கோத்து அணிந்துகொள்கிறோமா? இப்படித்தான் பதவியில் இருக்கும் வரையில் அவர்களைப் பாராட்டிப் புகழ்ந்து சிலர் ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

❋


பணம், பதவி, அதிகாரம் இவற்றுக்காகத் தங்களின் மனச்சாட்சியைப் பலி கொடுப்பவர்கள்; எந்தவொரு உயிரினத்தின் பட்டியலிலும் இடம் பெற முடியாதவர்கள்.

❋



அறிஞர் அண்ணா எழுதிய ''நீதி தேவன் மயக்கம்'' நாடகத்தில் இராவணனின் வாதங்களால் மனமாற்றம் கொண்டதுபோல் மன்றத்தில் பேசிய நீதிதேவன்; கடைசியாகத் தீர்ப்புக் கூற முடியாமல் மயங்கி விழுந்து விடுவார்! இது நாடகத்தில் மட்டுமல்ல; நாட்டிலும்கூட நடக்கிறதே!

அறிவும் ஆற்றலும் சரியாக செயல்படுத்தப்படா விட்டால், அது; ஓர் அறிஞனின் எழுத்தும் பேச்சும் அச்சாகும்போது - அழகின்றியும் பிழைகள் மலிந்தும் வெளிவருவது போன்ற நிலைக்கு ஒப்பாகும்.



கையூட்டுப்பெற்றும், கடத்தல் தொழில் செய்தும் குவித்திடும் செல்வத்தில் கொஞ்சத்தை எடுத்து தர்மம் செய்பவர்கள்; பிடிபட்டால் கொள்ளைக்காரர்கள்! பிடிபடாவிட்டால் கொடை வள்ளல்கள்!

கடத்தலில் ஒரு பகுதியைக் காணிக்கை செலுத்தி விட்டு பழனிக்கு காவடி எடுப்பவனும் - திருடிய போது சிக்கிக் கொள்ளாததற்காக திருப்பதி உண்டியலில் பணம் போடுகிறவனும் - பக்தர்களாக வேஷம் போடும் நாட்டில் கடவுளைப் பற்றி சந்தேகம் வருவது இயற்கைதானே!



''எண்ணிப் பார்த்தேன் - இத்தனை நட்சத்திரங்கள் வானத்தில் இருக்கின்றன'' என யாராவது சொன்னால் ஒத்துக் கொள்கிறோமா? ஆனால் நரக லோகம், சொர்க்கலோகம் என்ற கதைகளை மட்டும் ஏற்றுக்கொண்டு ஏமாறலாமா?

✵

எதிர்க்கட்சிகளை அறவே அழித்துவிட முனைவது; ஜனநாயகமெனும் நாணயத்தில் ஒரு பக்கத்தையே தேய்த்து மறைத்து விடுவதைப் போன்றது!

✵




பேறு பதினாறும்
பிள்ளைகள் என்பது ஊறு;
மணமக்களுக்கு இதைக் கூறு!

✲

பெரும்பான்மை, உடலைப் போன்றது! சிறுபான்மை, கண்களைப் போன்றது! உரிமைகள் அனைத்தும் பெரும்பான்மைக்குத்தான் என்று சொல்லி சிறுபான்மையினரைப் புறக்கணிப்பது; கண்களைக் குத்திக் கொள்கிற குருட்டுச் செயலாகும்!

✲



கோடிகளுக்காகக் குப்புற வீழ்ந்தவன்; பூமிக்கு அடியில் கொள்கையைத் தேடுகிறேன் என்று கூறி, அறிவுக் குருடர்களை மட்டுமே ஏமாற்ற முடியும்.

கோபம் கொள்வது தீது! தன் இனத்துக்கு
அழிவு வரும்போது கோபம்
கொள்ளாமலிருப்பது பெரும் தீது!

கேட்டு வாங்கும் நன்றி கூழாங்கல் - அது
கேட்காமலே கிடைக்கும் போதுதான்
கோகினூர் வைரம்!



உலகத்திலேயே மலிவானது உபதேசம் ஒன்றுதான்! உபதேசிகள் பலர் அதனை மலிவாக விற்றுவிட்டுத் தங்கள் கடையைக் காலியாக வைத்திருப்பார்கள்.

✲

உண்மைகள் தங்கம் மாதிரி! ஓராயிரம் ஈராயிரம் அடி மண்ணுக்குக் கீழே மறைந்து கிடக்கும்! என்றாவது ஒரு நாள் சுரங்கங்கள் அமையும், தங்கத்துகள்கள் வெளியே வருவது மாதிரி, உண்மைகளும் வெளியே வந்து ஒளி உமிழும்.

✲



வெற்றி என்பது; கூட்டுப்பறவைக்குத் தாய்ப்பறவை கொண்டு வந்து ஊட்டிவிடும் இரையல்ல! சிறகு முளைத்த கூட்டுப்பறவைகள்; தங்கள் செயல் மூலம் தாய் மகிழத் திரட்டுகின்ற கனிவர்க்கமாகும்!

✵

வெடிமருந்துக்கிடங்கில் விளையாட்டுப் பிள்ளைகள் பட்டாசு கொளுத்தினார்கள். அயோத்தியில் பிரச்சினைக்குரிய பகுதியில் வெறியர்கள் ''கரசேவை'' நடத்த அனுமதிக்கப்பட்டார்கள். இரண்டுக்கும் விளைவு ஒன்றுபோலத்தான். இதனால் இந்திய வரலாற்றில் டிசம்பர் 6 கறுப்பு நாளாயிற்று!


✵



அற்பனைத் தூக்கிவந்து அவை நடுவே
வைத்தால்; அவன் ''அவை அறிதல்''
என்ன விலை என்றுதானே கேட்பான்!

அறிவு, ஆற்றல், அழகு, புகழ், செல்வம்
அனைத்தும் பெற்றிருந்தாலும் ''வாய்மை''
இல்லாத மனிதர் அரை மனிதரே!


அதிகார வர்க்கம் முள் நிறைந்த
ரோஜாவாக இருக்கலாம்;
முள்ளம் பன்றியாக
சிலிர்த்துக் காட்டக் கூடாது!



''அனைத்தையும் படைத்தவன் ஆண்டவன்தான் என்கிறான் மனிதன். அந்த மனிதனின் படைப்புத்தான் என்ன?''


''இது தெரியாதா? மனிதனின் படைப்புத்தான் அந்த ஆண்டவனே!''

அண்ணனை நேசித்த கும்பகர்ணனை ''தூங்குமூஞ்சி'' என்றார்கள். வீடணனை ''ஆழ்வார்'' என்றார்கள். தொடர்ந்து வீசப்படும் இந்தச் சூதுவலையில் சிக்காமல் தப்பினால்தான் உடன்பிறப்புப் பாசம் அறுபடாமல் இருக்கும். இனமானமும் காப்பாற்றப்படும்.



ஆட்சி, மக்களால்தான் நடத்தப்பட வேண்டுமென்று ஜனநாயக தத்துவம் பேசுகிறவர்கள்; பெருந் தொழில்கள், தனி முதலாளிகளின் ஆதிக்கச் சுரண்டலின் கீழ்தான் இருக்க வேண்டுமென்று விரும்புவது - தங்களின் தன்னல வயிறு வீங்கிப் புடைப்பதற்காகத்தான்!

ஆதிக்க வர்க்கத்தினர், தம்மை உயர்ந்த சாதி என்று அவையிலேயே அறைகூவல் விடுத்துப் பேசுவது ஆணவத்தின் உச்சகட்டம் - அதைக் கண்டு கொள்ளாமலே சிலர் வாயை மூடிக் கொள்வது எல்லை தாண்டிய கோழைத்தனம்!



மனிதன்; தன்னைத் தவிர வேறு யாருக்குமே
தெரியாது என எண்ணிக் கொண்டு செய்கிற
ஒவ்வொரு செயலுக்கும் ஒரு சாட்சி இருக்கிறது
என்பதை மறந்து விடுகிறான் -
அதுதான் மனச்சாட்சி!

மனிதனின் புத்தி நாயின் வாலைப் போல்
நிமிர்த்த முடியாமலும் இருக்கக் கூடாது.
அதன் நாக்கைப் போல் எச்சில் சொட்ட
தொங்கிக் கொண்டும் இருத்தலாகாது.



என்னதான் வேகமாக ஆகாயத்தை நோக்கி வீசிப் பறக்க விட்டாலும் கோழியாக இருந்தால்; அது ஒரு கூரை உயரம்தான் பறக்கும்! புறாக்கள் எனில்; அவை தானாகவே கோபுர உயரத்துக்கு மேலேயும் பறக்கும்!



எல்லாம் தெரிந்தவரைப் போல நடிப்பதைவிட தெரியாததைக் கேட்டுத் தெரிந்து கொள்பவர்தான் அறிவுடையோர் வரிசையில் வைக்கப்படுவார்.






விண்மீன்களைப் பார்க்கும் கவிஞன்; அவை
மெத்தையில் விரித்த மலர்கள் என்கிறான்!
விழிசோர உழைக்கும் தோழனோ; அவை எமது
வர்க்கத்தின் வியர்வை முத்துக்கள் என்கிறான்!

✲

உரிமைகளை மறுத்துக் கட்டுப்படுத்துவது
சர்வாதிகாரம்!
உரிமைகளை வழங்கி கட்டுப்பாடு காத்திடுவது
ஜனநாயகம்!

✲




சுற்றுலாப் பயணிகள் பழைய நினைவுச் சின்னங்களில் கரிக்கோடு கிழிப்பது போல், சிலர் புதுக்கவிதை எழுதுகிறார்கள். மரபுக்கவிதை என்ற பெயரால் சிலர் நான்கு புறமும் சட்டத்தை மட்டும் அமைத்து விட்டு நடுவில் படத்தை வைக்க மறந்து விடுகிறார்கள்.



சட்டத்தைப் பயன்படுத்திச் சமுதாயத்தை ஒழுங்குபடுத்துவது என்பது, சலவை செய்யப் பட்ட உடைக்கு இஸ்திரிப் பெட்டி போடுவது போல! கொஞ்சம் கவனம் தவறினாலும் துணி கருகிவிடும்.






கடலும் வானும் ஒன்றுக்கொன்று நிலைக்கண்ணாடி போல நீலவண்ணம் காட்டுகின்றன. ஆனால் அலைகளும், முகில்களும்; கடலும் வானும் ஒன்றுக்கொன்று ஒழுங்காக முகம் பார்த்துக் கொள்ள அனுமதிப்பதில்லை. அப்படித்தான் காதலர்களுக்கிடையிலேயும் பெற்றோர், உற்றார் உறவினர் குறுக்கீடுகள்!

✲

கருவிலிருப்பது ஆணா பெண்ணா என்று பிரித்துப் பார்த்து இயற்கை பாரபட்சமாக நடந்து கொள்வதில்லை! ஆனால் சமுதாயம் மட்டும் அப்படி நடந்து கொள்வது ஏன்?

✲



நாள்காட்டியில் நாம் கிழிக்கும் தாள்களை குப்பையில் போடாமல் பத்திரமாக வைத்துக் கொள்ள வேண்டும். காரணம்; அவை ஒன்றும் எழுதப்படாத நமது கடந்த கால சரித்திர ஏடுகள்!

நாடு என்கிற இந்தப் பரந்து விரிந்த பூங்காவில் ஆங்காங்கு கரையான் புற்றுக்களாக சமுதாயச் சீர்கேடுகள் உருவாகியிருக்கின்றன. ஒவ்வொரு புற்றுக்குள்ளும் ஒளிந்து கிடக்கும் வகுப்புவாத நச்சரவங்கள் ஒடுக்கப்பட்ட மக்களின் உயிரைக் குடித்துக் கொண்டேயிருக்கின்றன. எனவேதான் புற்றுகள் ஒழிந்த பூங்காவாக நாடு திகழ வேண்டுமென நாம் பணியாற்றுகிறோம்.




படுதீவிரவாதியாகத் தன்னைக் காட்டிக்
கொள்கிற ஒருவன்; வழியில் பணம்
தடுக்கினால் குப்புற வீழ்ந்து விடுவான்!
அவனைப் பார்த்துக் கோழைகள் கூட
கைகொட்டிச் சிரிப்பார்கள்!

✲

பக்த சிரோன்மணிகள் பாதி வயதிலே
காலமாகிவிட்டால்
''பகவான் அழைத்துக் கொண்டான்'' என்கிறார்கள்.
பகுத்தறிவுவாதிகள் பாதி வயதிலே காலமாகி விட்டால்
மட்டும் ''பகவான் தண்டித்து விட்டான்'' என்கிறார்கள்.
பைத்தியம் யாருக்கு? சொல்பவர்களுக்கா?
கேட்பவர்களுக்கா?


✲



புன்னகையை உதடுகளால் மறைத்துத் தடுத்துக் கொள்ளலாம். கண்ணீர்; இமைகளை உடைத்துக் கொண்டு வெளிவந்து விடுமே!

புண்ணுக்குப் புனுகு பூசி சல்லாத் துணி கொண்டு மூடிடுவோரும்; பொல்லாதார் எனத் தெரிந்தும் - அவரது புகழ்பாடிக் கிடப்போரும் ஒரே வகையினர்தான்!


புற்றிலிருந்து வேகமாகப் புறப்படும் ஈசல், பறக்கும்பொழுதே தனது சிறகுகளை இழந்துவிடும். பொய்யும் அப்படித்தான்!



தன் நிழலைக்கண்டே அலறி ஆரவாரம் செய்கிற
பலவீனமானவனை; அவனது நிழலே
பின்தொடர்வதற்கு வெட்கப்படும்.

தன்னால் பயன்படுத்தப்பட்ட ஆயுதங்களையே
தன்னால் படைக்கப்பட்ட கடவுள் சிலைகளின்
கைகளில் மனிதன் கொடுத்தான்.

அந்தப் பழைய ஆயுதங்களை வைத்துக்
கொண்டு; இப்போது நவீன ஆயுதங்களுடன் உலவும்
மனிதனை அந்தக் கடவுள்களால் எதிர்கொள்ள
முடியவில்லை!



நாயைப்போல் ஒரு வாலில்லாத குறைதான்; மனிதன் நன்றி தெரிவிக்க மறப்பதற்குக் காரணம்!

❋

''**நா**ன்'' என்பது ''நாம்'' என்பதில் கலந்துள்ள ஒரு துளி என்று எண்ணுகிற வரையில்தான்; ஒருவர் ஜனநாயகத்தைப் பற்றிப் பேச முடியும். ''நான்'' என்பது தன்னைக் குறிக்கும் சொல்லாக இல்லாமல் ஆணவத்தின் வெளிப்பாடாக இருந்தால் சந்தேகமின்றி அவர் சர்வாதிகாரிதான்!

❋



திராவிட இயக்கத்தின் நீண்ட நெடிய வரலாற்றையும் அதன் தியாகத்தையும், உழைப்பையும், திறன்மிகு பணிகளையும் அறியாத சிலர்; அறிந்தோர் போல் நடித்துக் கொண்டு - ஆடுமாடுகள் எனப் புகுந்து மேய்வதற்காகப் பாய்ந்து வருகின்றனர். வேலிகளை வலுப்படுத்த வேண்டியது நமது வேலை.

தி.மு.கழகம் மேற்கொண்டுள்ள அரசியல் அணுகுமுறை; சமுதாய மறுமலர்ச்சிப் பணியை உரமாகக் கொண்டு வலிவுடன் வளர்க்கப்படும் ஆயிரங்காலத்துப் பயிராகும்.



ஆருடம் சொல்பவன் புத்திசாலி! காரணம்;
அவன் சொல்வதை அவனே நம்புவதில்லை!
நம்பிக் கேட்பவர்தான் ஏமாளி!

✵


ஆதிக்கவர்க்கம், வகுப்புவாத சக்தி,
மதவெறியாட்டம், இவற்றுக்கு ஆதரவாகவும்;
பகுத்தறிவுச் சிந்தனைக்குப் பகையாகவும் - மக்களை
மூளைச்சலவை செய்து கொண்டிருக்கும் ஏடுகள்
எவையாயினும் அவைகளைத் தொடுவதும் இழிவே
எனும் முடிவுக்கு வராத வரையில் ஒடுக்கப்பட்ட
சமுதாயம் உருப்படவே முடியாது!

✵



விண்முட்டத் தாவிக்குதித்து வீரசபதம்
செய்வோர் சிலர்; கண் எதிரே ஒரு
கத்தைப் பணத்தைக் காணின் மண் குதிரை
ஆவார் பாரீர்!

விண்மீன்களைக்
கவிஞன் நீலநிற மெத்தையில் தூவப்பட்ட
மலர்கள் என்கிறான் -
தொழிலாளியோ நிலவொளிபட்டு பிரகாசிக்கும்
வியர்வைத் துளிகள் என்கிறான்.



பிறருக்கு நாம் வழங்கிய அறிவுரைகளில் நாமே
எத்தனை பின்பற்றினோம் என எண்ணி
மகிழ்வதை விட எத்தனை அறிவுரைகளுக்கு
முரணாக நாமே நடந்துகொண்டோம் என்பதை
எண்ணி வருந்துவதே மனச்சாட்சியுள்ள
மனிதனுக்கு அடையாளமாகும்.

✲

பிற்போக்குவாதிகள் நம்மைப்
பாராட்டுகிறார்கள் என்றால்;
நமது முற்போக்குக் கொள்கை எங்கேயோ
முடங்கிப் போய்விட்டது என்று பொருள்!

✲




ரோஜா மலர்க்குவியலில், மாலைக்கென எடுத்துக் கொள்ளப்பட்டு தொடுக்கப்பட்ட மலர்கள் போக எஞ்சிய மலர்கள் பூச்செண்டில் வைத்துக் கட்டப்படும். அதற்குப் பிறகும் எஞ்சிடும் மலர்கள், மணம் வழங்கும் 'அத்தர்' தயாரிக்கப் பயன்படுத்தப்படும். அது போலத்தான்; என்றோ ஒரு நாள் - ஏதோ ஒரு நல்வாய்ப்பு வருமென இலட்சியவாதிகள் எண்ணிடவேண்டும்.

✲

சந்தனம் போல் தேய்ந்தால் புகழுண்டு; சாக்கடை யாகப் பெருகினால் போற்றுதற்கு யாருண்டு?

✲



பிரார்த்தனை செய்யாமல் உலகில் பிறந்து;
பிரார்த்தனை செய்தாலும் பயனின்றி என்றோ
ஒருநாள் இறந்து போகிற மனிதன்; இந்த
இருநிலைகளுக்குமிடையில் நிலைகுலையாமல்
நேர்மையாக நடத்துவதற்குப் பெயர்தான் வாழ்க்கை!

✲


பிறர் இதயத்தில் ஊசிகொண்டு
குத்துபவர்கள்; தமது இதயத்தை -
காலம், கடப்பாறை கொண்டு குத்தும்
என்பதை மறந்து விடக் கூடாது!

✲



விளக்குகள் ஏற்றி எழில் பெருக்கிடக் கார்த்திகை!
வெடிகள் வெடித்து ஆரவாரம் செய்திடத் தீபாவளி!
உழைப்பின் பெருமையை உணர்ந்து மகிழ்ந்திட
ஒரே விழா பொங்கல் விழாதானே!

வேப்ப மரத்தில் ஒரு குச்சியை ஒடித்துப்
பல் துலக்கினால் அந்தக் குச்சிகூட தன் மனக்
கசப்பைக் காட்டிக் கொள்கிறது! வேம்பினும்
தாழ்ந்தவனா தமிழன்?



பரிமாறப்படுவதோ பத்துவகைப் பதார்த்தங்களுடன்
அறுசுவை விருந்து, இலையில்!
அழைப்போ; ''சீ! உட்கார்ந்து சாப்பிட்டுத்
தொலை!'' என்று!
பசியால் துடிப்பவன் கூட ''போடா நீயும் உன்
விருந்தும்'' என்று கூறிவிட்டுப் போய் விடுவான்.
அதற்குப் பெயர்தான் மான உணர்வு!

✲

பசியால் பல்லி கத்துவதைக் கூட ஆரூடம் என
நம்புகிற பாமரர் இருப்பது ஆரோக்கியமான
சமுதாயத்திற்கு அடையாளமா?

✲



தகுதி திறமை என்பது ஒரு சிலருக்கு மட்டுமே
''பூர்வஜென்ம பலன்'' என்பது பொய்!
வாய்ப்பு வழங்கப்பட்டால் எல்லோருக்கும்
அந்த வரம் கிடைக்கும்.

✲

தனது மானத்தை இழந்தாவது தனது இனத்தின்
மானம் காப்பவன் தியாகி - தன்னலத்துக்காக
தனது மானத்தையும் இனமானத்தையும்
அடகு வைப்பவன் துரோகி!

✲



போராட்டம் - அடக்குமுறை - சிறைச்சாலை - தியாகம் என்றெல்லாம் அவற்றின் பக்கமே தலைவைத்துப் படுக்காமல்; எடுத்த எடுப்பிலேயே பதவிச் சிம்மாசனத்தில் ஏறிக் கொண்டவர்களுக்கு போராட்டங்களையும், கிளர்ச்சிகளையும், அதன் தன்மை; தேவை இவற்றை அறியாமல் - அவற்றை நடத்துகிறவர்களின் மீது சேறுவாரி வீசுகிற செயலில் ஈடுபடத்தான் தோன்றும்!

போலித்தனங்களும், ஏற்றத் தாழ்வுகளும்; சமுதாயத் தருவைப் புரையோடி அரித்துக் கெடுக்கும் புல்லுருவிகளாகும்.




பொறுமை என்பது மெழுகுவத்தியின் சுடர்!
பொறாமை என்பது கொளுத்திவிடப்பட்ட
வைக்கோற்போரின் ஜுவாலை!

✵


பொறுமை; எல்லை கடந்து சோதிக்கப்படும்
போது - எரிமலை வெடிப்பது போல் புரட்சி
வெடித்துக் கிளம்பி விடும் என்பதற்குச்
சரித்திரம் சான்று பகருகிறது!

✵



வன்முறை எப்போது
தலையெடுக்கிறது?
மெய் எழுத்து தாக்கப்பட்டு,
உயிர் எழுத்து அகற்றப்படும்போது;
எஞ்சி நிற்பது ''ஆய்த''
எழுத்துத்தானே!

வருமுன் காப்பவன்தான் அறிவாளி -
வந்தபின் தவிப்பவன் ஏமாளி!



ஒளியில்தான் நமது நிழலின் வடிவம் நமக்குத் தெரிகிறது. சோதனையில்தான் நமது நெஞ்சின் வலிமை, நமக்குப் புரிகிறது!

✵

ஒரு தனி மனிதன் அளவுக்கு மீறிய அதிகாரங்களைப் பெற்றிருப்பது எப்படி எதேச்சாதிகாரத்துக்கு வழிவகுக்குமோ; அதே போல அரசியல் சாசனத்தின் மூலமாக ஒரே இடத்தில் அதிகாரங்கள் குவிக்கப்பட்டிருப்பதும் - எதேச்சாதிகாரத்தில் கொண்டுபோய் விட்டு விடும்.

✵



சோளக் கொல்லைக் காவலுக்கு ஒரு பொம்மை! பறவைகள் அந்த பொம்மையின் மீது கூடுகட்டிக்கொண்டே சோளத்தைச் சுவைக்கின்றன!


இப்படி ஒரு நாடு இருக்கலாமா?

சோம்பேறி, கனவு காணும் போதுகூட கடைக்காரனைப் பார்த்து ''உரித்த வாழைப்பழம் இருந்தால் கொடு'' என்பது போலத்தான் காண்பான்!



இலட்சியவாதி என்று கூறிக் கொள்பவர் தனக்குத்தானே ஒரு கேள்விக்குப் பதில் கூறிக்கொள்ள வேண்டும்! ஏற்றுக்கொண்ட இலட்சியத்துக்கு அவர் விசுவாசமாக இருக்கிறாரா? என்பதே அந்தக் கேள்வி.

இசைக்கு மொழி இல்லை;
ஆனால் மொழிக்கு இசை தேவை;
அதனால்தான் தமிழிசை இயக்கம் தோன்றியது.



விஞ்ஞானப் புதுமைகள் பூத்துக் குலுங்கிடும் நாட்களிலும்; வேள்விகள், யாகங்கள் என்று மக்களை ஏமாற்றுவது தண்டிக்கப்பட வேண்டிய மோசடிக் குற்றங்கள் அல்லவா?

✲

விலைகளால் உருவாகும் ஜனநாயகத்தை;
கொலைகளால் உருவாகும்
சர்வாதிகாரத்தைவிட மேலானது என்று
எப்படிப் போற்ற முடியும்?

✲



சிரித்துப் பேசும் சிலரது உள்ளத்தில்
எரித்துப் பொசுக்கும் வஞ்சக நெருப்பு
இருப்பது; ஏமாளிகளின் கண்ணுக்குத்
தெரியாது!

✵

சிரங்கு பிடித்தவர்களுக்கு சொறிந்துகொள்வது
சுகமாகத் தோன்றும். சொறிந்து முடிந்த
பிறகுதான் இரணமான புண்களில் எரிச்சல்
தாங்காமல் துடிப்பார்கள். இந்தப் பட்டியலில்
இன்னமும் எத்தனையோ மனிதர்கள்!

✵




பெண்மை என்பதையே ஒரு பலவீனமாகப் பெண்களே கருதுகிற வரையில் அவர்களின் அடிமை நிலை அறவே நீங்காது!

✲


பெரியார் என்னும் மலைப்பாறையில் செதுக்கப்பட்ட மாமல்லபுரத்துச் சிற்பம் அண்ணா! நாமெல்லாம் அந்தச் சிற்பத்தின் மாதிரி வடிவங்கள்!

✲



மீனுக்கு நீச்சலும் மானுக்குத் துள்ளலும் கற்றுத்தரத் தேவையில்லை. ஆனால் மனிதனுக் குத்தான் நடக்கவே கற்றுத்தர வேண்டியுள்ளது. தொடர்ந்து அவன் வாழ்க்கையில் எப்படி நடக்க வேண்டுமென்பதற்கும் தொகை தொகையாக அறிவுரை ஆசிரியர்கள் தேவைப்படுகிறார்கள்.

மிஞ்சினால் கெஞ்சுவது எப்படிக் கோழைத்தனமோ; அதைப் போன்றதுதான் கெஞ்சினால் மிஞ்சுகிற வீரமும் ஆகும்!




பாரதியாருக்கு ஒரு கேள்வி;
கொள்கைகளை விற்றுப் பதவிகள் வாங்கும்
மனிதர்கள் மலிந்த நாட்டில் - கண்களை
விற்றுச் சித்திரம் வாங்கினால் மட்டும்
கைகொட்டிச் சிரிப்பார்களோ?

✵

பாறைகளும் உருகின! பாலைவனங்களும்
கண்ணீர் பெருக்கின! பாவையரின்
விதவைத் துயர் போக்கப் பாழும் வைதீகம்
மட்டும் முகம் பார்க்கவில்லையே!

✵



தோழமையின் உயிர்த்துடிப்பே
துன்பத்தைப் பகிர்ந்து கொள்வதில்தான்
இருக்கிறது.

✲

தோல்வியால் அனலில் இட்ட
அல்லித் தண்டாகவும் ஆகிவிடக் கூடாது!
வெற்றியை; நெற்றியில் எழுதிக்
கொண்டும் திரியக் கூடாது!

✲


தமிழனே; இது கேளாய்!
இந்தி ஆதிக்கம் இன்னும் எத்தனை நாள்தான்
நமைக் கொட்டுவது கொடுந்தேளாய்?

✲



மனிதர்களுக்கு இறக்கைகள் இருந்து பறக்கத் தெரிந்தால்; அவர்களிலும் கழுகுகளையும் - புறாக்களையும் பார்க்க முடியும்.

மனிதனுக்கு மரணத்தைப்பற்றிய பயம் இருக்கக் கூடாது என்பதற்காகத்தான் மறுபிறப்பு உண்டு என்ற பொய்யைக் கூறி வைத்திருக்கிறார்கள்.



இலக்கியம், காலக்கண்ணாடி! அகழ்வு ஆய்வுகூட அறிவித்திடாத வரலாறுகள், வாழ்க்கை முறைகள், பண்பாடுகள் பலவற்றைத் தன்னகத்தே கொண்டுள்ள புதையல்!

இறந்து போகும் மனிதர்களுக்கு இன்னொரு பிறவி உண்டென்றால்; பிறகு எதற்காக அவர்களின் ஆத்மா திருப்தி அடைய ஆண்டு தோறும் திதியும் திவசமும் நடத்த வேண்டும்?




பாராட்டும் புகழும் குவியும்போது;
குட்டையான வாசலுக்குள் -
குனிந்து செல்வது போன்ற அடக்கம் வேண்டும்.
இல்லையேல் நெற்றியடி கிடைக்கும்!

✲


பகுத்தறிவைப் பயன்படுத்தித் தெளிவு பெற வேண்டும் என்பதைத்தான்; அந்தக் காலத்திலேயே ''கண்ணால் கண்டதும் பொய், காதால் கேட்டதும் பொய், தீர விசாரிப்பதே மெய்'' என்ற பழமொழியாகச் சொன்னார்கள்.

✲




வெள்ளச் சீற்றத்தில் உயிர் காத்துக் கொள்ள தன்னைக் கட்டிப்பிடித்துக் கொண்ட தனது பூசாரியைக் கூடக் கடவுள் காப்பாற்றவில்லையென்று செய்தி வந்துள்ளது. பிறகு அவர் எப்படி மார்க்கண்டேயனைக் காப்பாற்றினார் என்பதை நம்புவது?

வெற்றிகளால் அடக்கத்தையும் தோல்விகளால் ஊக்கத்தையும் பெறக்கூடியவர்களுக்கு வீழ்ச்சி என்பது எப்போதுமே இல்லை!



ஒருவருக்கு வரக்கூடிய எந்தக் கேடுகளையும்
அவரது அறிவினாலோ ஆற்றலினாலோ தடுத்து
நிறுத்த முடியாது என
அவரது தலைவிதி நிர்ணயிக்கப்பட்டு
விட்டது என்பது
உண்மையானால்; அதனை ஆரூடம்,
சோதிடங்களின் மூலம்
முன்கூட்டியே தெரிந்து கொள்வதால் என்ன பயன்?

ஒடுக்கப்பட்ட மக்களின் சமூக ரீதியான
இடஒதுக்கீட்டை ஒழிப்பதற்காகவே;
உள்நோக்கத்துடன் சாதியை ஒழிப்பதாகப்
பேசுவது ஒரு சதிச் செயலே ஆகும்.



ஆர்வமும் அக்கறையுமில்லாத எந்தவொரு
பணியும் அரை வேக்காட்டுச்
சோறாகத்தான் ஆகிவிடும்.

✵

ஆணவ அடக்குமுறைகள்;
அதிகாரத்திலிருப்போருக்குக்
குளிர்ந்த காற்றுப் போல் சுகமாகத் தோன்றும்!
ஆனால் - அது, மக்களின் மனப்புயல்;
அமைதியெனும் ஆழ்கடலில்
மையங்கொண்டு நகர்ந்து வருவதின்
அறிகுறி என்ற உண்மை தெரிவதில்லை!

✵



உணர்ச்சிப் பசியை அடக்க முடியாத ஒரு
விதவைப்பெண், பத்து பேரிடம்
இரகசியமாக யாசிப்பதை விடுத்து -
வெளிப்படையாகவே ஒருவனை மணந்து
வேளா வேளைக்குச் சாப்பிடுவதில் என்ன
தவறு இருக்க முடியும்?

உள்ளத்தோடு ஒன்றிக் கலவாத எந்த ஒரு பணியும்
நிரவப்படாத பள்ளமாகத்தான் கிடக்கும்.




ஆசைகள் சிறகாகலாம்! அதற்காகக் கால்களை இழந்துவிட்டுப் பறந்தால்; பிறகு பூமிக்குத் திரும்பமுடியாது!

✲


ஆயிரம் திருநாமங்களைக் கூறி அர்ச்சனை செய்து கொண்டே ஆண்டவனின் சிலை மீது போர்த்தப்பட்டுள்ள தங்கக் கவசத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக உரித்தெடுப்பதுதான் ஆத்திகம் என்றால் ''நாத்திகம் வாழ்க!'' என்று நான் சொன்னால் அதில் தவறு என்ன?

✲




அஜீரணத்துக்கு மருந்து தேடி அலைகிற வயிறுகளும் அரைவயிற்றுக் கஞ்சிக்கு ஏங்கித்தவிக்கும் இதயங்களும் இருக்கின்ற நாட்டில் ''சுதந்திரம்'' என்பது கீறல்கள் விழுந்த கண்ணாடி போன்றதுதான்!

அழகான ஓவியமென்றால் அதற்கோர் கண்ணாடி, அழுத்தமான சட்டம், பின்புறத்தில் பாதுகாப்பான ஒரு தகடு அத்தனையும் பொருத்துகிறோம். அது போலவே ஓர் இயக்கத்திற்கும்; கடமை, கண்ணாடி யாகவும் - கட்டுப்பாடு, சட்டமாகவும் - கண்ணியம், தகடாகவும் அமைந்திடல் வேண்டும்!



சுவரை நோக்கி வீசிய பந்து; திரும்பவும்
தன்னை நோக்கி வருமென்று தெரியாதவன்
அறிவுத் தெளிவு இல்லாத ஆணவக்காரன்!

சகோதர ஒற்றுமை; இராமாயணத்தில்
தசரத குமாரர்களிடம் மிகுதியா? அல்லது
பாரதக் கதையில் வரும் பாண்டவர்களிடம் மிகுதியா?
என்ற தலைப்புள்ள பட்டிமன்றம் நடைபெற்றால்;
நடுவர் தீர்ப்பு எப்படி இருக்கும்?



உயர்ந்த இடத்தில் உட்கார்ந்திருப்போரின்
நாவை நாடக மேடையாக்கிக் கொண்டு -
பொய்மை; வாய்மை வேடம் கட்டி நடிப்பதை
நம்புவது போல் நடிப்பவர்கள் சுயநலவாதிகள்!

✲

உணர்ச்சியே இல்லாதவர்க்கு
உயிர் இருந்தும் பயனில்லை!
உணர்ச்சி வயப்படுவோருக்கு
உயர்வு இருந்தும் பெருமையில்லை!

✲



எந்தவொரு செயலில் ஈடுபட்டாலும் அதில் உண்மையாகவும் ஊக்கத்தோடும் ஒன்றிக் கலந்து உழைத்திடாவிட்டால் அந்தச் செயலின் பயன் ஊனமுற்றதாகவே அமையும்.

✵

எமன் என்று ஒருவன் இருப்பானேயானால் அவன் கோழைகளின் உயிரைப் பறித்தமைக்கு வெட்கப்படுவான். வீரர்களின் உயிருக்கோ மரியாதை அணிவகுப்பு நடத்தி அழைத்துச் செல்வான்.

✵



முன்னூறு பேர் பயணம் செய்த விமானம் விபத்துக்குள்ளானதில் மூன்று பேர் ''தெய்வாதீனமாக'' தப்பிப்பிழைத்தார்கள் என்றால்; இறந்தோர் அனைவரும் இறை நம்பிக்கை இல்லாதவர்களா?

முதலாளித்துவத்தின் உடம்புக்குள் உணவாகச் செல்லுகிற தொழிலாளர் வர்க்கம்; தேவையான இரத்தத்தை அளித்துவிட்டுக் கழிவுப் பொருளாக வெளியேறுவதுதான்;
காலம் காலமாக இருந்து வருகிற கொடுமை!



''உன்னை விற்காதே!'' என்றார் புரட்சிக் கவிஞர். இன்னமும் தன்னை விற்றுக்கொண்டு தயவுக்குத் தவம் கிடக்கிறவர்களின் தன்மானத்தை எந்தக் கல்லில் உரைத்துப் பார்ப்பது?

✲

உண்மை என்பது வெறும் வாய்ச் சொல்லாகவோ எழுதப்படும் வார்த்தையாகவோ இல்லாமல் மனச் சாட்சியைப் புறக்கணிக்காமல் வெளிப்படும் போதுதான் அது; வாய்மை எனப் போற்றப்படும் தகுதி பெறுகிறது.

✲



வெள்ளையர் ஆட்சியில் - இந்தியாவில் கவர்னர் ஜெனரலாக இருந்த வாரன் ஹேஸ்டிங்ஸ் மீது இங்கிலாந்தில் ஒரு வழக்குத் தொடரப்பட்டது.

ஹேஸ்டிங்சுக்கு எதிராக 9 நாட்கள் வாதிட்டார் எட்மண்ட் பர்க் என்பவர். இடையே ஒருவர் குறுக்கிட்டு ''ஹேஸ்டிங்சைப் பாராட்டி இந்தியாவில் வாரணாசியில் அவருக்குக் கோயிலே கட்டியிருக்கிறார்கள்'' - என்று ஹேஸ்டிங்சுக்கு ஆதரவாகச் சொன்னார்.

இதைக்கேட்டதும் - பர்க்;


''இதில் ஒன்றும் ஆச்சரியமில்லை. இந்தியாவில் நல்லது செய்யும் கடவுளுக்கு மட்டும் கோயில் எழுப்புவதில்லை; அம்மை, காலரா போன்ற நோய்களைப் பரப்பும் துஷ்ட தேவதைகளுக்கும் ஆலயம் அமைக்கிறார்கள்'' - என்று சட்டென்று சொன்னார்.



மாட்டு வண்டி ஓடும்போது ''கட கட'' என்ற சப்தம் எவ்வளவு பெரிதாக எழுந்தாலும் யாரும் கவனிப்பதில்லை. ஆனால் மோட்டார் வண்டியில் ஒரு சிறு சப்தம் கிளம்பினாலும், உடனே அது என்ன என்று கவனிக்கிறார்கள். காரணம் என்ன?


மாட்டு வண்டி விலை குறைந்தது.
மோட்டார் வண்டி விலை உயர்ந்தது.

மாற்றாரின் பகை மூட்டத்திலிருந்து மக்களைக் காத்திடும் கடமைகூட இரண்டாவது இடத்துக்குத் தள்ளப்படுகிற அளவுக்கு; மாசு நிறைந்த புகை மூட்டத்திலிருந்து மக்களைக் காத்திடும் பொறுப்பு இப்போது நம் முன்னால் நிற்கிறது!



ஆச்சரியக் குறிகள், கொஞ்சம் வளைந்தால்
கேள்விக் குறிகள் ஆகிவிடும்!
கேள்விக் குறிகள் நிமிர்ந்தால்
ஆச்சரியக் குறிகளாகி விடும்!

ஆதிக்கக்காரர்கள் கூடித் தங்களின்
சுயநலத்துக்காகச் செய்த ''சதி''க்குக்
கால் (ா) முளைத்து; ''சாதி''யாகி விட்டது
என்பதுதான் உண்மை!



வந்துவிட்ட நோயைத் தடுப்பதற்கு
சிகிச்சை முறைகள் மருந்து வகைகள் தேவை!


நோய் வராமலே... தடுப்பதற்கு
மூலிகைகள், பச்சிலைகள்,
முறைப்படுத்தப்பட்ட பயிற்சிகள்,
பழக்கவழக்கங்கள் தேவை!

வருண பேதங்கள் வாழட்டுமென்று கூறி; அதைச் செயலிலும் காட்டிக் கொண்டிருப்பவர்கள் - இன்னமும் இந்த விஞ்ஞான உலகத்தில் ஆட்டம் போடுவது வேதனையான வேடிக்கை அல்லவா?



மேடையிலே சாதி ஒழிப்பு முழக்கம் - ஆனால்
பழக்க வழக்கமோ சாதிப் பிணைப்பு! இவர்கள்
விலாங்கு மீன்கள் - வேடதாரிகள் - விஷக்கிருமிகள்!

மதவெறியனோ அல்லது சாதிவெறியனோ
வெளிப்படையாகத் தன்னை அறிமுகப்படுத்திக்
கொண்டு வரும் போது ஏற்படும் ஆபத்தைவிட
அவன் ''தமிழ்-தமிழன்'' என்றெல்லாம்
தளுக்கு காட்டிக் கொண்டு வரும்போதுதான்
ஆபத்து அதிகம் என்பதை உணர்ந்து தமிழர்கள்
விழிப்போடு இருக்க வேண்டும்.



ஓ! மேகங்களே; சூரியனால் உருவான நீங்கள் அந்த சூரியனையே மறைக்கிறீர்கள்!

மறந்து விடாதீர்கள், காற்று வீசத்
தொடங்கினால் கலைந்தும் கரைந்தும் மறைந்து
விடுவீர்கள்!

கொழிக்கும் கற்பனை வளத்தால் கொற்கை
முத்துக்கள் போன்ற பாராட்டு மொழிகளை
அணிவிப்பதால் பன்றிகள் அழகுபெறுவதில்லை!
அதற்கு மாறாக முத்துக்கள் அல்லவா பெருமை
இழந்து போகின்றன!



ஒருவர் எத்தனை ஆண்டு வாழ்கிறார் என்பதை
அவர் இறந்துபோன நாளில் இருந்து
கணக்கிட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

✵

''ஒரு நண்பர் உன்னைப்பற்றிப் புறங்கூறிப் பேசுகிறார்
புழுதிவாரித் தூற்றுகிறார்'' என்று சிலர் என்னிடம்
சொன்னபோது; அவர்களைப் பார்த்து, நான்
''அப்படியா? அந்த நண்பருக்கு நான் எந்தப் பதவியும்
தரவில்லையே; எந்த பாராட்டும் வழங்கவில்லையே-
பிறகேன் என்னைத் தூற்றுகிறார்?'' என்று
வியப்புடன் வினவினேன்!

✵



உளதுகாமாலை ஒருவகை நோயே தவிர; உடல் வலிவின் அடையாளமல்ல! வீண் ஆரவார விளம்பர வெளிச்சமும் அந்த நோயைப் போலத்தான் நாட்டுக்கே கேடு!

✵

உளழலில் பிறந்து, ஊழலில் வளர்ந்து, ஊழலில் திளைத்துக் கொண்டிருப்பது உயர்ந்த சாதிக்காரர் களின் ஆட்சியென்கிற ஒரே காரணத்துக்காக அதற்கு ஒத்துப் பாடிக்கொண்டிருப்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் வகுப்புவாதிகளேயாவார்கள்.

✵




பாயசம், பொங்கல், அதிரசம், அக்காரவடிசல் என
வாயூறும் பதார்த்தங்களை வழங்கிக்கொண்டே;
பருகிடும் பாலில் ஒரு துளி விஷத்தையும் கலந்திடும்
வித்தை கற்றோரிடம் என்றென்றும்
எச்சரிக்கையோடிருக்க வேண்டும்.

✵

பாலில் விஷம் கலந்தாலும் அல்லது விஷத்தில் பால்
கலந்தாலும்; இரண்டிலும் கேடு, பாலுக்குத்தான்!
அந்த விஷத்தைப் போன்றதே துரோகம் என
உணர்ந்து விலகுவதே விவேகம்!

✵



''முடியுமா நம்மால்'' என்பது தோல்விக்கு முன்பு வரும் தயக்கம்!

''முடித்தே தீருவோம்'' என்பது வெற்றிக்கான துவக்கம்!

முன்னேறும் உலகத்தில் நடந்து செல்கிறேன் என்று பண்பாடுகளை அவிழ்த்துப் போட்டுவிடவும் கூடாது! பின்னோக்கி நடந்து மூடநம்பிக்கைச் சகதியில் மூழ்கி விடவும் கூடாது!




உண்மையை மறைக்க முனைவது
விதையை பூமிக்குள் மறைப்பது
போலத்தான்!

✲

உடலில் இருந்து இரத்தம் வெளியேறுமே எனப் பயந்து;
நோய் தீர்க்கக்கூடிய அறுவை சிகிச்சையை அதிக நாள் தள்ளிப் போடக்கூடாது. தூய்மையான புதிய இரத்தம் பெற்றுக் கொள்ளலாம் என்ற துணிவுடன் செயல்படாவிட்டால் ஒரு மனிதனாயினும் - ஓர் இயக்கமாயினும் வாழ முடியாது.

✲



இழிவு செய்யும் நண்பர்களைவிட
எதிர்த்து நிற்கும் பகைவர் எவ்வளவோ மேல்!


''இந்தி பேசாத மாநிலங்கள் விரும்பும் வரையில் இந்தித் திணிப்பு இல்லை'' என்று பாகுமொழி உதிர்த்தவாறு பக்குவமாகவும், படிப்படியாகவும், நயமாகவும், நளினமாகவும் ''இந்திதான் எதிர்காலத்தில் இந்தியாவின் ஒரே மொழி'' என்ற குறிக்கோளில் வெற்றி கண்டிட நடத்தப்படுகிற நாடகத்தின் பெயர்தான் ''தேசிய நீரோட்டம்'' என்றால் அந்தக் கூத்தரங்கத்தின் பக்கத்திலே தலைகாட்டுவதும் தவறல்லவா?





மணவிழா ஊர்வலம் சென்று கொண்டிருக்கும் போது இடையே நாலுபேர் இருமுவர்! இரண்டு பேர் கனைப்பர்! மூவர் தும்முவர்! அவர்களைப் பொருட்படுத்தி - அதற்காக ஊர்வலம் நின்றுவிடுவதில்லை!

மத்தாப்பு, பல வண்ணம் காட்டும்; காண்போரின் உள்ளங்கவர ஒளியும் உமிழும்! வைத்த விழி வாங்காமல் அதனை வேடிக்கை பார்ப்போரும் உண்டு! மத்தாப்பு விளையாட்டு முடிந்த பிறகுதான், மனைக்குள்ளேயிருக்கும் தீபத்தின் அருமை அவர்களுக்குத் தெரியும்.



பழகிப் போய்விட்டது பதவிக்காகப் பல் இளிப்பது என்பவன்; அழுகிப் போய்விட்ட அடையாளமற்ற பிணத்துக்குச் சமம்!

✵

பதவி, பவிசு, அதிகாரம, அந்தஸ்து; இவை ஒளிமிக்கவைதான்! ஆனால் இவற்றிற்கு மின்னல் ஒளியின் ஆயுள்தான்! திறனும், தியாகமும், கொள்கை உறுதியும்தான் சூரிய ஒளிக்கு ஒப்பானவை!

✵



''ஆண்டவன் முன்னே அனைவரும் சமம்'' என்பது
உதட்டளவுப் பேச்சாக இருந்தால் போதாது
என்றுதான், ஆலய அறங்காவலர் குழுக்களில்
ஆதிதிராவிடர் பிரதிநிதியும் கட்டாயம்
இருந்தாக வேண்டுமென்று கழக அரசு விதி
செய்தது.

✵

ஆதிக்கம் செலுத்துகிற மொழி குயிலாகக்
கூவி வந்தாலும் - மயிலாக ஆடி வந்தாலும்;
மயங்கிடோம்! அன்னைத் தமிழ் காப்பதற்கு
ஆவிதரவும் தயங்கிடோம்!

✵



குரங்கிலிருந்து மனிதன் தோன்றினான் என்பது டார்வின் சித்தாந்தம்! தாவுகிற புத்தி மட்டும் இன்னும் சிலரை விட்டுப் போகாத திலிருந்து அந்த சித்தாந்தம் சரியென்றே தோன்றுகிறது!

✵

குறைகளைச் சுட்டிக்காட்டுவது திருத்தம் செய்வதற்காக! குறைகளைக் கூறுவதுபோல ''கோள்'' மூட்டுவது தீய பகையைத் தூண்டுவதற்காக! இதில்; இரண்டாவது செயல் வெறுக்கத்தக்கது!

✵



கல்லறையில் புதைக்கப்பட்ட பிணத்தைக்
கூட காலம், தோண்டிப் போட்டு
விடுகிறது; கறுப்புப் பணத்தை மட்டும்
விட்டு விடுமா?

✲

கண்ணபிரானும் நாரதரும் உடலுறவுகொண்டு
பெற்றெடுத்த பிள்ளைகள்தான் ''பிரபவ'' முதல்
''அட்சய'' வரையிலான அறுபது ஆண்டுகள் என
நம்புகிறவர்களை அறிவொளி பெற்ற
சமுதாயத்தினர் என ஏற்றுக்கொள்ள முடியுமா?

✲



''பதவி மேலே போட்டுக்கொள்ளும் துண்டைப் போன்றது. கொள்கை இடுப்பில் உள்ள வேட்டியைப் போன்றது'' என்றார் அண்ணா! ஆனால் சிலர் வேட்டியை விட்டு விட்டுத் துண்டுடன் திரிகிறார்களே; அந்தோ - பரிதாபம்!

✵


பல்வேறு தேசிய இனங்களையும் மொழிகளையும் கலாச்சாரங்களையும் கொண்ட ஒரு நாட்டின் ஒருமைப்பாடு; இவைகள் அனைத்தையும் சமமாக மதிப்பதில்தான் இருக்கிறது.

✵



இந்திரன் சந்திரன் என்று
ஒருவரைப் புகழுகிறார்களே;
அது அவரைப் புகழ்வது அல்ல -
இழிவுபடுத்துவதாகும் என்பதை
குருபத்தினிகளான அகல்யா கதையையும்
தாரையின் கதையையும்
படித்தவர்கள் புரிந்து கொள்வார்கள்!

இன உரிமை, மொழி உரிமை எவரிடமும்
யாசித்துப் பெறுவது அல்ல! இன்னுயிரைப்
பணயமாக வைத்துப் போராடிப்பெற
வேண்டியவைகளாகும்!



''ஓயாமல் உழைத்த ஒரு தொண்டன் இங்கே
ஓய்வெடுத்துக் கொண்டிருக்கிறான்'' என்று
என் கல்லறையில் எழுதப்படும்
எழுத்துக்களுக்காக நான் ''தவம்'' இருக்கிறேன்.

✲

சாதிப்பற்று என்கிற அடிக்கற்களை
வைத்து எழுப்பப்பட்ட கட்டிடத்திற்கு
''சமத்துவ மாளிகை'' என்று பெயர்
சூட்டினாலும்; அது சாய்ந்து விழுவதை
யாராலும் தடுக்க முடியாது!

✲



கோயிலில் நகைகளையும் சிலைகளையும்
கொள்ளையடிப்பவர்களுக்குத் துணை போகிற
புரோகிதர்களும் பூசாரிகளும் கடவுள்
நம்பிக்கையுள்ளவர்கள் என நம்பித்தானே நமது
சமுதாயம் ஏமாறுகிறது!

கொள்வினை கொடுப்பினை தன்
சாதிக்குள்ளேயே இருக்க வேண்டுமென்று
பிடிவாதமாக இருப்பவர்களால் சமத்துவக்
கொள்கையை எந்தக் காலத்திலும்
நிலைநாட்ட முடியாது!



''நோய் நாடி நோய் முதல்நாடி அது
தணிக்கும் வாய் நாடி.....''

எனும் வள்ளுவர் அறிவுரையைச் செயல்படுத்த முன்வராதவரையில், வன்முறைகளை ஒழிப்பது என்பது வெறுங்கனவேயாகும்.

''நல்லவை மட்டுமே ஆண்டவன் படைப்பு; தீமைகள் அனைத்தும் தானாகவே உற்பத்தியானவை'' என்றால் - அதைப்போல, அந்த நல்லவைகளும் தானாகவே உற்பத்தியானவைதான் என்பதை ஏன் மறுக்க வேண்டும்?




அதிகாரம் ஒரு கோழி முட்டை! சீராக அடைகாக்கப்பட்டால் ஆக்கப் பணி என்ற குஞ்சு வெளிவரும்! மக்கள் சக்தி என்ற மலையுடன் மோதினால்? இந்தக் கேள்விக்குப் பதில்; குழந்தைக்குக் கூடத் தெரியும்!

✵

இருமொழித்திட்ட ஆணை - சுயமரியாதைத் திருமணச் சட்டம் - சென்னை ராஜ்யத்துக்கு ''தமிழ் நாடு'' என்று பெயர் - இந்த மூன்று சாதனைகளும் உள்ளவரையில் அண்ணாவின் பெயரும் அவற்றோடு ஒட்டியிருக்கும்!

✵



மாறுபட்ட கருத்துக்கொண்ட தலைவர்களையோ, தொண்டர்களையோ கொன்று புதைத்துவிட்டு- அவர்களின் கல்லறை மீது வெற்றிக் கொடியைப் பறக்கவிடும் கொலை வெறியர்கள் மீது, அந்த இடுகாட்டில் புதைந்து கிடக்கும் எலும்புக் கூடுகள் கூட காரி உமிழும்!


மாற்றான் தோட்டத்து மல்லிகையும் மணக்கும் என்றார் மாமேதை அண்ணா! எருக்கம் பூக்களும் இனிய மணம் தரும் என்று என்றைக்கும் அவர் சொன்னதில்லை!



மனிதனைப் பண்படுத்தப் பயன்படாத வரையில் மதம் என்பது யானைக்கு வரும் ஒரு நோயையே குறிப்பிடுவதாகும்.


மனிதனின் புத்தி நாயின் வாலைப்போல் நிமிர்க்க முடியாமலும் இருக்கக் கூடாது; அதன் நாக்கைப் போல் எச்சில் சொட்டத் தொங்கிக்கொண்டும் இருக்கக்கூடாது.

மமதை கொண்டு அலைபவர்கள்; மனோநிலை சரியில்லாதவர்களின் நாக்குகளைக் கடனாக வாங்கிக் கொள்கிறார்கள்! ஆனால் திருப்பி தருவதில்லை!



நமது உடலில் பல்லாயிரக்கணக்கான நாடி நரம்புகள் இருப்பினும்; நோயின் காரணம் உணர்ந்து சிகிச்சை செய்திட, மருத்துவர்கள் நமது முன் கையில் மூன்று நாடிகளை மட்டுமே பிடித்துப் பார்க்கின்றனர். அதுபோலவே மொழி, இனம், நாடு என்ற மூன்றின் பிரச்சினைகளை உணர்ந்து செயல்பட்டாலே உலகில் மனித சமுதாயம் அமைதியுடன் வாழும்.

தன்மான இயக்கம்தான் தமிழனைத் தலை நிமிரச் செய்தது. ஆனால் தலை நிமிர்ந்த சில தமிழர் அந்தத் தன்மானத்தையே விலை கூறி விற்றுவிட்ட கொடுமைதான் என்னே!



உயிருள்ள உடலின் நாடி நரம்புகள்
போன்றது தொழிலாளி வர்க்கம்;
தாடி மீசை போன்றது முதலாளி வர்க்கம்!


✲

உணவு, உடை, உறையுள் இவை மூன்றும்
மக்களின் அடிப்படைப் பிரச்சினை எனினும்
அவைகளுடன் ''உணர்வு'' என்ற அடித்தளத்துப்
பிரச்சினைக்கும் உரிய இடம் தந்தாக வேண்டும்.

✲


தனக்கு எல்லாம் தெரியும் என்று காட்டிக்
கொள்பவர்கள்; எதுவுமே
தெரியாதவர்களாகத்தான் இருப்பார்கள் -
ஏமாற்றிப் பிழைக்கும் வழி ஒன்றைத் தவிர!

✲



நாஸ்திகன் தன்னம்பிக்கை கொண்டவன்.
எதைச் செய்வதும், எது நேர்வதும்,
தன் செயலால் - தன் திறமையால் - தன்
சிந்தனையால் என்று நினைப்பவன்.
ஆனால் ஆஸ்திகனோ தன்னம்பிக்கை
அழிந்தவன். தான் எல்லாவற்றிற்கும் மேலான ஒரு
சக்தியால் ஆட்டிவைக்கப்படும் பொம்மையே
என்று கருதுபவன். அதனால், தனது செயல் -
திறமை - சிந்தனை அனைத்தும் சத்தற்றவை
என்று நினைப்பவன்.


ஆணவம் என்பது தலைக்கனம் மட்டுமல்ல;
தலைக்குள்ளிருப்பதை உறிஞ்சிக் கொழுக்கும்
அட்டையுமாகும்!



சமூக நீதியைப் புறக்கணித்து விட்டுத் தீட்டப்படும் எத்தகைய அரசியல், பொருளாதாரத் திட்டங்களானாலும் அவை ஓட்டைக் குடத்தில் தண்ணீர் மொண்டிடும் முயற்சியாகவே அமையும்.

சட்டங்களால் மட்டும் சாதி பேதத்தை ஒழித்து விட முடியாது. அந்த உணர்வை அகற்றும் மாமருந்து மனமாற்றம் என்பதை மறந்து விடலாகாது!

மற்றவர்களை விமர்சிக்கும்போது விமர்சிப்பவரின் மனச்சாட்சி முணுமுணுப்பதை அந்த விமர்சகர் காது கொடுத்துக் கவனிப்பது, அவருக்கும் நல்லது - சமுதாயத்துக்கும் நல்லது!



நீண்ட காலமாக நெஞ்சுக்குள் அடங்கிக் கிடக்கும் பொறுமை; சீண்டிவிடப்படுமேயானால் பூமியின் ஆழத்துக்குள்ளிருந்து கிளம்பும் எரிமலையைப் போல் வெடிக்கும்!

✵

இன உணர்வு எனும் யானை, தவறிப் போய் குழியில் விழுந்தால்; எறும்பு கூட ஒரு உதை கொடுக்கத் துணிந்து விடும்!

✵

களை நிறைந்த கழனியில் பயிர் தழைத்து வளராது; கண்மூடிப் பழக்கமுள்ள சமுதாயம் செழித்து வாழாது!

✵



பழியுணர்வு மட்டுமே வாழ்க்கை எனக்
கொண்டவர்கள்; பகைவர் முயற்சியில்லாமலே
தமக்குத் தாமே குழி வெட்டிக் கொள்வார்கள்!

ஜனநாயகத்தில் தலைகளின் எண்ணிக்கை மட்டும்
முக்கியமல்ல! தலைக்குள் என்ன இருக்கிறது
என்பதும் மிக முக்கியமாகும்!

மானத்தை விற்றுப் பதவியை நத்திக் கிடப்பவன்
மலத்தைக் கூடத் தன் மார்பில் பூசிக் கொண்டு;
அதனை மணக்கும் சந்தனம் என்பான்!



நடமாடும் கோயில்கள் நாற்பது கோடிக்கு மேல்
வறுமைக் கோட்டுக்குக் கீழே வாடுவதைப்பற்றிக்
கவலைப்படாமல் அயோத்தியில் இராமர் கோயில்
கட்டும் பிரச்சினைக்காக நாட்டையே
இரணகளமாக்கத் திட்டமிடுவது
சிறுபிள்ளைத்தனமா? அல்லது
காட்டுமிராண்டித்தனமா?

குளவிக் கூட்டின் புழுப்போல, கொட்டப்பட்டுக்
கொட்டப்பட்டுத் தயாரிக்கப்படுகிறவன்தான்
கொள்கை வைரமாக இருக்க முடியும்.




முகஸ்துதி என்பது எதிரியின்
மோகனாஸ்திரம்! அதில் மயங்கி விட்டால்;
தன்னைப் பெற்று வளர்த்து ஆளாக்கிய
தாயைக்கூட அலட்சியப்படுத்துகிற
ஆணவம் தலைக்கேறி
அழிவுப் பள்ளத்தில் தள்ளிவிடும்!

✵

வல்லினம், மெல்லினம், இடையினம் ஆகிய
மூன்று எழுத்துக்களைக் கொண்டே ''தமிழ்''
என நம் மொழியை அழைக்கிறோம். ஆனால்
இனப்பற்று இன்றி யாருக்கோ உழைத்து
நலிகிறோமே; எண்ணிப் பார்த்தோமா?

✵



பூமியின் கருக்கலைப்பு; பொங்கும்
எரிமலை! அடேடே! பூமாதேவிக்குக் கூட
பெண் குழந்தை பெற்றுக்
கொள்வதென்றால் பிடிக்காதா?

சாதிப்பற்றும், சமயத்துக்குத் தக்க கொள்கைப் பற்றும்
கொண்டோரிடம் - இலட்சிய உறுதியை எங்ஙனம்
எதிர்பார்த்திட முடியும்?

குறிக்கோள் எவ்வளவு போற்றத் தகுந்ததாக
இருந்தாலும், அதை அடையும் வழியும் அதைவிடப்
போற்றத் தக்கதாகவே இருக்கவேண்டும்.




நாம் என்ன சொல்கிறோம் என்பதில் நாம் தெளிவாக இருந்தால்; மற்றவர்களுக்குத் தெளிவு ஏற்படுத்துவது எளிது!

✲

தமிழே! உன்னை, உளங்கவர் ஓவியமே! உற்சாகக் காவியமே! ஓடை நறுமலரே! ஒளியுமிழ்ப் புதுநிலவே! அன்பே! அழகே! அமுதே! உயிரே! இன்பமே! இனிய தென்றலே! பனியே! கனியே! பசுந்தோகை மயிலே! பழரசச்சுவையே! மரகத மணியே! மாணிக்கச் சுடரே! மன்பதை விளக்கே! - என்றெல்லாம் அழைத்திடத் தோன்றுகிறது. ஆனாலும்; தமிழே - உன்னைத் ''தமிழே'' என்று அழைப்பதிலே உள்ள இன்பம் வேறு எந்தச் சொல்லிலும் இல்லை என்பேன்!

✲



பூக்களின் வியர்வையைக் கதிரவன்
துடைக்கிறான் - உழைக்கும் புழுக்களின்
வியர்வையைத் துடைத்திட யாருளார்?

✲


வழியிலே போகிற ஓணானைத் தூக்கி மடியிலே
கட்டிக்கொண்டு; ''அய்யோ! அது குத்துதே -
குடையுதே!''
எனக் கூச்சலிடுவதற்குப் பெயர்தான்
இமாலய முட்டாள்தனம்!

✲




மக்களுக்கான உணவு, உடை, உறையுள் எனும்
மூன்று முக்கிய துறைகளைப் பற்றிக்
கவலைப்படுவதை விடுத்து; நாட்டின்
பாதுகாப்புக்காகப் பணியாற்ற வேண்டிய
உளவுத் துறையை மட்டும் - தனக்கு ஒத்துவராத
கட்சிகளை உடைப்பதற்கு ஈடுபடுத்துவதில்
அக்கறை காட்டும் ஆளுங்கட்சியினால்
நாட்டுக்கு நாசமே வந்து சேரும்.

கட்டுப்பாட்டை மீறுவதுதான்
வீரம் என்றால், அது 'களை'யாகுமே தவிர
விளையும் பயிராகாது!



ராஜ பரம்பரைக் கதையான மகாபாரதத்தை எழுதியவர் சாதாரணக் குடும்பத்திலே பிறந்த வியாசர். ஆனால் ராஜகுடும்பத்திலே பிறந்து, அந்த ராஜயோகம் தனக்குத் தேவையில்லையென்று அதைத் துறந்துவிட்ட இளங்கோ எழுதியது ராஜபரம்பரைக் கதையல்ல. ஒரு சாதாரண குடும்பக்கதை. இதற்குப் பெயர்தான் 'நிலையும் நினைப்பும்' என்பதாகும்.

இழந்துவிட்ட ஒன்றை எதிரிகள் திரும்பக் கொடுத்து நாம் வாங்கிக்கொண்டோம் என்பது இழிவு! அதனை நாமே திரும்ப எடுத்துக் கொண்டோம் என்பதுதான் பெருமை!



மொழியை விழிக்கு ஒப்பிடுகிறோம் - ஆனால் விழியிழந்தோர் கூட மொழியை இழப்பதில்லையே! தமிழர்களாகிய நாம்; விழி, மொழி இரண்டையும் இழந்துவிட்டு ''தலைவிதி'' என தவிக்கப்போகிறோமா?

மொழியால் தமிழர் - இனத்தால் திராவிடர் - நாட்டால் இந்தியர் - உலகத்தில் மனிதர் என்பதே நமது இயக்கத்தின் கருத்து! ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' எனப் பாடிய கணியன் எனும் சங்க காலப் புலவர் தனது சொந்த ஊரான பூங்குன்றத்தைப் பெயருடன் இணைந்து ''கணியன் பூங்குன்றனார்'' என்றே அழைக்கப்பட்டார் என்பது சிந்திக்கத் தக்கது!



எண்ணெய் இருக்கும் வரையில்தான் விளக்கு எரியும்.
ஒருவரிடம் உதவி பெறும் வரையில்தான் சிலரது நட்பு நிலைக்கும்.

✲


ஏற்றுக்கொண்ட இலட்சியத்துக்கு மாறாக
இன்று ஒருவன் செயல்படுகிறான் என்றால்;
அவன் ஏற்கனவே அந்த இலட்சியத்தில் பற்று
இல்லாமல் மக்களை ஏமாற்றிக்
கொண்டிருந்திருக்கிறான் என்பதுதான்
உண்மை!

✲



ஒருவரின் பெருந்தன்மையை இன்னொருவர்
கோழைத்தனம் என்று கூறக்கூடாது!

ஒரு சமுதாயத்தின் உரிமையை, கலாச்சாரத்தை,
முன்னேற்றத்தைச் சீர்குலைப்பதற்கு இன்னொரு
சமுதாயம் கங்கணம் கட்டிக்
காரியமாற்றுவதுதான் வகுப்புவாதம் - அதை
எதிர்த்து முழங்கி பாதிக்கப்படும்
சமுதாயத்திற்குப் பாதுகாப்பு அரணாக
விளங்குவதை வகுப்புவாதம் எனக் கூறுவோர்
கடைந்தெடுத்த வஞ்சகரேயாவார்.



எதையும் அப்படியே நம்பி, விடுவது பைத்தியக்காரத்தனம். ஆழமாக ஆராய்ந்து அதன்பின் முடிவுக்கு வருவதே பகுத்தறிவு.

✲

எல்லோருக்கும் நல்லவனாக நடப்பதும் முடியாது. எல்லோருக்கும் பகைவனாகவும் கூடாது.


✲

எட்டாத பழத்துக்குக் கொட்டாவி விட்டு ஏமாந்தவர்கள் எரிச்சலில் ஏசற்கணைகளைப் பொழிந்து கொண்டேயிருப்பர். அவற்றைத் தடுத்துத் தூளாக்கும் கேடயம்; நாம் காட்டுகிற பொறுமையே ஆகும்.

✲



எங்கெங்கோ தமிழகத்து மூலை முடுக்குகளில் சிற்றூர், பேரூர், குக்கிராமம், நகரங்களில் பிறந்தோம். வான்பரப்பில் திக்கெட்டும் சூழ்ந்த முகில்கள் பிரசவித்த மழைத்துளிகளைத் தாங்கிடும் மண் அந்தத் துளிகளை எல்லாம் பேராறாக மாற்றிடுவது போல பெரியாரும் அண்ணாவும் நம்மை இந்தப் பெரும் இயக்கமெனும் நதிப்பெருக்காக ஆக்கினார்கள்.



எள் முனையளவு சாதி உணர்வு இருப்பினும்; அது முள் முனையாக மாறி சமுதாயத்தின் கண்ணைக் குத்திக் குருடாக்கிவிடும்!






வாழ்க்கையில் நடிப்பவர்களின் வாழ்க்கை
நினைவில் நிற்காத
ஒரு நாடகமாகவே முடிந்து விடும்.


வாசற்படி தாண்டி வெளியே வந்துவிட்டால்
வீட்டுப் பிரச்சினைகளை மறந்து விடக்
கூடியவர்தான்;
நாட்டுப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும்.

வெறிகொண்ட யானையை எதிர்ப்பது வீரம்;
வீதியின் நடுவே பன்றியைக் கண்டு ஒதுங்கிச் செல்வது
விவேகம்.



ஜனநாயகம் காப்பதற்காகவும், தமிழின மக்களின் நல்வாழ்வுக்கான உரிமைகளுக்காகவும், சமூக நீதி அமைவதற்காகவும் குரல் கொடுத்து; அதனால் இருமுறை ஆட்சி கலைக்கப்பட்டபோதும்; இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து நடத்திய போராட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர் பத்து பேரின் பதவிகள் பறிக்கப்பட்டபோதும் கொள்கை வழி நின்றதும், நிற்பதும் தி.மு.க.! இதில் நான் ஒரு அங்கம் என எண்ணுகிறபோது அடையும் மகிழ்ச்சிக்கு ஈடு இணையே இல்லை!

ஜனநாயகத்தில் எதிர்க்கட்சி என்பது நெடுஞ்சுவர் போல அசையாது நின்றால்; ஆளுங்கட்சி என்ன பேசினாலும் அதைத்தான் எதிரொலித்துக் கொண்டிருக்கும்!



கடந்த காலத்தில் செய்துவிட்ட தவறுகளை,
நிகழ்காலத்தில் பாடங்களாக ஆக்கிக் கொண்டால்;
எதிர்காலத்தில் எச்சரிக்கையுடன் இருக்க முடியும்.

✵

''**வெ**ள்ளம் போல் தமிழர் கூட்டம் - வீரங்கொள்
கூட்டம்; அன்னார் உள்ளத்தால் ஒருவரே
மற்றுடலினால் பலராய்க் காண்பார்!
கள்ளத்தால் நெருங்கொணாதே; எனவையம்
கலங்கக் கண்டு துள்ளும் நாள் எந்நாள்?''
என்று புரட்சிக் கவிஞர் ஏங்கினார்! ஆனால்
பூணூல் அணிந்தும் அணியாமலும் உள்ள
புரட்டுக்காரர்களும் புகைச்சல்காரர்களும்; நாம்
உள்ளத்தால் ஒருவராதல் கண்டு வீங்கி
வெடிக்கின்றார் என்பதை உணர்ந்தாயா உடன்பிறப்பே!
உணர்ந்தால்தான் உய்யும் தமிழினம்!

✵




கடலையை வாரி இறைத்து விட்டு அதனைப்
பொறுக்கித் தின்போர்க்குத் தெரியாமல்
கடலையே குடித்து ஏப்பமிடுபவர்கள் எல்லாம்
வள்ளல்களா?

✵

தண்டனைக்குப் பயந்து தவறு செய்யாமல் இருப்பவன்
சராசரி மனிதன்!
தவறு செய்ய நினைப்பதே தவறு எனக்
கருதுகிறவன் சராசரியை விட மேலானவன்!
தவறான நினைப்பே வராதவன்தான் மிக
உயர்ந்த மனிதன்!

✵



சுதந்திரத்தை இழந்துவிட்டால் கூட போராடி மீட்டுக் கொள்ள முடிகிறது - ஆனால் சுயமரியாதையை இழந்து விட்டால்; அது தரையில் சிந்திய பால்தான்!

✵

சாதிமத வெறி உணர்வு என்பது; சமத்துவம் எனும் தூய பசும்பாலில் ஒரு துளி விஷம் கலந்தது போன்றதாகும்.

✵


சுதந்திர இந்தியாவில் அதன் அங்கங்களாக விளங்கும் மாநிலங்கள் மட்டும் மத்திய அரசுக்குத் தேவையில்லாத அதிகாரக் குவியல்கள் என்னும் விலங்குகளால் கட்டுண்டு கிடப்பானேன்?

✵



சலுகைகளுக்காகவோ - பணம், பதவிக்காகவோ ஒருவரைப் பாராட்ட வேண்டுமென்று முடிவெடுத்து விட்ட சந்தர்ப்பவாதிகள்; அவரது மூக்கில் ஒழுகுகிற சளியைக் கூட ''முத்துத் தொங்கட்டான்'' என்று வர்ணிக்கத் தொடங்கி விடுவார்கள்.

சட்டத்தைப் பயன்படுத்துவது என்பது கண்ணாடிப் பாத்திரத்தைக் கையாள்வது போன்றது! அலட்சியமாகப் பிடித்தால் நழுவி விழுந்து உடைந்துவிடும்! அழுத்திப் பிடித்தால் அதுவும் நொறுங்கி, கையையும் கிழித்துவிடும்!




வரவேற்காமல் வரக்கூடியது நோய் - தடுத்தாலும்
கேளாமல் தழுவக் கூடியது சாவு - இவற்றுக்கு
மத்தியிலே மனத்தூய்மையுடனும் உறுதியுடனும்
மனிதன் ஆற்றுகின்ற செயல்கள்தான் நிலைத்து
வாழக் கூடியவை.

✵


வகுப்பு வெறியுடன் எழுதுகிறவர்கள்,
பேசுகிறவர்கள், செயல்படுகிறவர்கள், இன்னமும்
அந்த ஆதிக்கத்தை நிலை நிறுத்துவதற்காக
பச்சைப் பாம்பைப் பச்சைக் கொடி என்று
பசப்புகிறவர்கள்; வகுப்புவாத உணர்வுக்குப்
பகையான திராவிட இயக்கத்தை வகுப்புத் துவேஷ
இயக்கம் என வர்ணிப்பது வஞ்சகமும் சூதும்
நிறைந்த காரியமல்லவா?

✵



விளக்கு என்பது வீட்டுக்குள்
ஒரு பொருளாக இருந்து பயனில்லை.
அது கொளுத்தப்பட்டால்தான் ஒளி கிடைக்கும்.
அதைப்போல எழுத்துக்களைப் படிப்பதும்,
எண்களைக் கணிப்பதும் மட்டும் போதாது!
ஏன்? எப்படி? எதற்காக? என்பன போன்ற
சிந்தனையைப் பெருக்கும் கேள்விகளைக் கேட்டு
மூடநம்பிக்கைகளிலிருந்து விடுபட்டால்தான்
''அறிவொளி'' கிடைத்ததாக ஏற்க முடியும்.

விளக்கைத் தூண்டினால் வெளிச்சம்
சிரிக்கும்; வெறுப்பைத் தூண்டினால்
விரோதம் எரிக்கும்!




ஆணவத்தின் காரணமாகத் தலையில்
கனம் ஏறினால்; அது உடனடியாக
நாக்கைத்தான் பாதிக்கிறது!

✲

இளைய தலைமுறையே; எழுவாய்!
செயப்படு பொருள் பயனிலையேல் விழுவாய்!
அறிவில் மூத்தோரைத் தொழுவாய்!
அரிய பயன் காண ஆழ உழுவாய்!

✲

முள்ளின் மீது விழுந்த துணியைக் கிழிந்துவிடாமல்
எடுக்கத் தெரியாதவர்களும் - முள்ளை முள்ளால்
எடுக்கத் தெரியாதவர்களும் - ஒரே வகையான
மூடர்களே ஆவார்கள்!



''நாடும் ஏடும்'' என்ற தலைப்பில் அறிஞர் அண்ணா
அன்றொரு நாள் முழங்கினார் - எனினும் நாம்;
''நாடும் ஏடுகள்'' எவை என்பதை இன்னமும்
தெரிந்து தெளியாமல் இருப்பது சரிதானா?

✲

உயரத்தில் இருப்போன் அருகே - அடிவாரத்தில்
கிடப்போனும் சென்று அமர வேண்டும்
என்பதற்காக இடஒதுக்கீடு செய்வது ஒரு
சலுகையல்ல; அது ஓர் உரிமை!

✲

எந்தவொரு சமுதாயத்திற்கும்
சந்தர்ப்பவாதிகளைப் போன்ற
''சாபக்கேடுகள்'' வேறு எவருமில்லை!


✲



மூலிகைக் கசப்பு மனிதனைக் காப்பாற்றுகிற மருந்தாகிறது. ஆனால்; மனக் கசப்பு, மனித நேயமென்ற புறாவைக் கொல்லும் பருந்தாகிறதே - நியாயமா?

மதவெறி ஒரு நச்சுப் போதை! அது, மனிதநேயத்தையும் - மக்களிடையே நல்லிணக்கத்தையும் மாய்த்து மரணப் படுகுழிக்கு அனுப்பிவிடும்!

மனச்சாட்சி உறங்கும் போதுதான் மனக்குரங்கு ஊர் சுற்றக் கிளம்புகிறது.



தங்கச் சுரங்கத் தொழிலாளியும்
முத்துக்குளிக்கும் தொழிலாளியும்
தங்கத்திலோ முத்திலோ தனக்காக
ஓர் அணி செய்து கொள்வதில்லை;
ஆனால் நெசவாளி மட்டும் தனக்காக
ஓர் உடை தயார் செய்துகொள்கிறான் -
காரணம், மானத்துக்கு அவ்வளவு மதிப்பு
அளிப்பதால்!

தன்னல உணர்வு தலைவிரிகோலமாக
அழுது புலம்பும்போது; தன்மான
உணர்வென்னும் இனிய இசை
செவிபுகாது!



பலர் வாடிட சிலர் வாழ்ந்திடும்
கொடுமையைத் தகர்ப்போம்!


✡

பொதுநலம் என்ற சொல்லை தன்னலத்திற்காகப்
பயன்படுத்தும்போது; அந்தச் சொல்லின்
ஒவ்வொரு எழுத்தும் ஒவ்வொரு
விஷத் துளியாகி விடுகிறது.

✡

பழுக்கக் காய்ச்சிய இரும்புத்துண்டு, நீரை உறிஞ்சி
விடும் என்பதற்காக; அந்த முயற்சியை ஏரி,
குளம், ஆறுகளில்
செய்து பார்ப்பவன் ஏமாளியாகத்தான் இருப்பான்.

✡



‘‘புலியும் மானும் ஒரே துறையில் தண்ணீர் குடிக்கும் நாடு’’ என்று புராண காலத்து வர்ணனைகள் இருக்கும்! ஆனால் இன்று; மானும் மானும் கூட ஒரு துறையில் தண்ணீர் குடிக்க முடியாத சாதீயக் கொடுமையல்லவா தலைவிரித்தாடுகிறது!



பொறுப்பினை உணர்ந்து காட்டப்படும் பொறுமை பூமிக்குள் அடங்கிக் கிடக்கும் எரிமலையின் நெருப்புக் குழம்பு போன்றது.



போலி வைரத்துக்கு உண்மை வைரத்தை விட மினுமினுப்பும் பளபளப்பும் அதிகம்! ஆன்ல் மதிப்பு மிகமிகக் குறைவு!





மேகங்களின் வியர்வை
மழையெனும் அமிழ்தமாகிறது!
மனிதனின் வியர்வையோ
அழுக்காகிறது!

☆

''**ம**னிதனை மனிதனாக மதிக்கக் கூடிய மதத்தையோ;
பிறவியினால் உயர்வு தாழ்வு கற்பிக்காத மதத்தையோ;
காசு பணம் செலவு செய்துதான் தன்னை
வணங்க வேண்டுமென்று கூறாத கடவுளையோ;
நாம் வேண்டாமென்று கூறவில்லை''


என்ற பெரியாரின் பொன் மொழியைப் பின்பற்றி நடந்தாலே - நாட்டில் எத்தனையோ பித்தலாட்டங்களை ஒழித்துவிட முடியும்.

☆



நீர்க்குமிழி போன்றது வாழ்வு என்கிறார்கள். அதுகூட; தான் வாழும் கணநேரத்தில் வான் பரப்பையே பிரதிபலிக்கிறதே - அந்தப்பரந்த மனம்; வாழ்ந்து மறையும் மனிதனுக்கு இருக்க வேண்டாமா?

நிலத்தைக் கீறும் கலப்பையால்
நேர்த்தியான தானியம் விளைகிறது!
நெஞ்சைக் கீறும் அடக்குமுறையால்
நிலைகுலையாத உறுதி விளைகிறது!



நமக்குள்ளே பதுங்கிக் கொண்டிருக்கும்
சாதிபேத உணர்வுகளை ஒழிக்க; நமது
குடும்பங்களில் கலப்புத் திருமண முறையை
மேற்கொண்டால்தான் ''நாம் தமிழர்கள்''
என்று மார் தட்டிக் கொள்வதை நமது
மனச்சாட்சியே அங்கீகரிக்கும்!


''நாணயம்'' என்ற சொல் ஒழுக்கமான பண்புக்கும்
பயன்படுத்தப்படுவதால்; நாட்டில் நாணய
மதிப்பைக் குறைப்பது, எதிர்காலத்தில் அந்தப்
பண்புக்கே சீரழிவை ஏற்படுத்தக்கூடும்.




தமிழகத்தில் முக்கனி சிறப்புடையது;
வாழை, மா, பலா! அந்த வாழைதான் தி.மு.க.-
மாங்கனிதான் அறிஞர் அண்ணா-மேலே
முள்ளிருப்பினும்,
உள்ளே இனிக்கும் சுவையளிக்கும்
பலாக் கனிதான் தந்தை பெரியார்.



தவறு செய்வதை விடப் பெரிய தவறு;
அந்தத் தவறு தன்னால் செய்யப்படவில்லை
என்று கூறுகிற தவறு!
அதைவிடப் பெரும் தவறு; தவறு செய்தவர்
அதற்குப் பிறர் மீது பழி போடும் தவறு!
அதைக் காட்டிலும் மிகப் பெரிய தவறு;
அந்தத் தவறு, தவறே அல்ல என்று சாதிக்கும்
தவறு!






பிரசவ வேதனையை நினைத்து, மனைவி
கணவனை வெறுப்பதில்லை!
அதுபோல அட்க்குமுறைக் கொடுமையை
நினைத்து, இலட்சியவாதி தனது
கொள்கைகளை விட்டு விடுவதில்லை!

✵

''பொதுஉடைமைக் கொள்கை திசையெட்டும்
சேர்ப்போம் புனிதமோடதை எங்கள் உயிரென்று
காப்போம்'' என்று பாடினான் புரட்சிக்
கவிஞன்! இன்று தனியுடைமை தரும் லஞ்சக்
கொஞ்சலுக்கு மஞ்சம் அமைத்துத்
தருவதன்றோ ''புரட்சி'' ஆகிவிட்டது! இனியும்
கண்மூடிக் கிடப்போரை எதிர்காலம்
காரி உமிழும்!

✵



நிந்தனை செய்து மேலும் மேலும்
கெடுவது எளிது! சிந்தனை செய்து
திருந்துவதுதான் கடினம்!

நன்றி மறப்பது நன்றன்று! அதை
நினைத்தால்தானே மறக்க
வேண்டியிருக்கிறது என்பதற்காகப் பலர்
நினைக்காமலே இருந்து விடுகிறார்கள்!



நடந்து வந்த பாதையை ஓர் இலட்சியவாதி
திரும்பிப் பார்த்துக் கொள்வது; அதில்
பெற்ற அனுபவங்களைத் துணையாகக்
கொண்டு, மேலும் இலட்சியப் பயணத்தைத்
தொடர்வதற்காகவே!

நல்லது செய்வதாக எண்ணிக்கொண்டு கேடு
செய்யும் நண்பர்களைவிடப் பகைவர்கள் ஆயிரம்
மடங்கு மேலானவர்கள்.

நண்பர்களின் துரோகத்தை விடப்
பகைவரின் பழிச் செயல் பல்லாயிரம்
மடங்கு மேல்!



ஒரு மலையைப் பிளந்து கற்களாக்குகிறோம்.
அவற்றில் ஒரு கல்லில் விக்கிரகம்
உருவாக்குகிறோம். மற்ற கற்கள் மண்டபங்கள்
ஆகின்றன. கோபுரமாகின்றன. மதில்
சுவராகின்றது. எல்லாக் கற்களும் விக்கிரகங்கள்
ஆகிவிட முடியாது. அப்படி ஆகிவிட்டால்
பிறகு கோயில் இருக்க முடியாது.
விக்கிரகமாயிருக்கிற கல்லும்; தானும் மற்ற
கற்களைப் போலத்தான் மலையிலிருந்து
வந்தோம் என்பதை மறந்து விடக்கூடாது.
கோயில் இருப்பதால்தான் விக்கிரகத்துக்கு
அபிஷேகம் - ஆராதனை எல்லாம்!
இல்லையேல், அது எந்த மரத்தடியோ? அல்லது
படித்துறையோ? ஒரு அமைப்பில் எல்லா
பொறுப்பிலும் இருப்போர் உணர்ந்துகொள்ள
வேண்டிய உண்மை இது!



கொள்கைக்காக வாழ்பவர்கள், அந்தக் கொள்கை காத்திடும் போரில் சில களங்களை இழக்க நேரிடலாம். அதற்காகப் போரிலிருந்தே புறமுதுகிட்டு ஓடிவிட மாட்டார்கள்.

குற்றமிழைத்தோர் மீது நடவடிக்கை எடுக்கிற அரசுக்கும், தன்னுடைய நடவடிக்கைகளையே குற்றமுடையதாக்கிக் கொள்கிற அரசுக்கும் பெருத்த வேறுபாடு உண்டு!

தாய் நாட்டுப் பற்றும் தாய் மொழிப் பற்றும் ஒரு குழந்தைக்குப் பால் தருவதற்கு; தாய்க்கு இரண்டு தனங்கள் இருப்பதைப் போன்றதாகும்.




தெள்ளிய ஆலின் சிறு பழத்தொரு விதை, பெரும்
படையொன்று தங்கிட நிழலும் தருகிறது;
அவ்விதையைப் பறவைகள் விழுங்கி எச்சமிட்டால்
அதே விதை வளர்ந்து மாடமாளிகை,
கூடகோபுரங்களையும் இடித்துத் தகர்த்து விடுகிறது.




தான் இடம் பெற்றுள்ள அமைப்புக்குத் தன்னால் என்ன பலன் என்று எண்ணிச் செயல்படுவோரின் எண்ணிக்கை பெருகுகிற வரையில்தான்; அந்த அமைப்பு வலிவுடன் இருக்கும். அமைப்பினால் தனக்கு என்ன பலன் என்று கணக்கிடுவோர் பெருகத் தொடங்கினால்; அந்த அமைப்பு அனல்பட்ட மெழுகாகிவிடும்.





கடைசி நம்பிக்கையாக இருக்கிற
நீதியும் கைவிட்டு விடும்போதுதான்
சமுதாயம் புரட்சியின் மீது நம்பிக்கை
வைக்கிறது!

தன் இனத்தவர் குப்புற வீழ்ந்து
மூக்குடைபட்டாலும்; அதையும் ஓர் வீர சாகச
விளையாட்டு என்று கூறிடும் இனப்பற்றுடைய
மனிதர்களைக் கண்ட பிறகும்கூடத் தமிழன்,
தன் இனத்தின்மீது பற்றுக்கொள்வதைப் ''பாபம்''
எனக் கருதுகிறானே; என் செய்ய!



கதவும் பூட்டும் இல்லாத கோயில்கள்
இருந்தால்தான் கடவுள்களின் சக்தியையும் -
மக்களின் பக்தியையும் நம்ப முடியும்!

சாதிப்பற்று கொண்டு அதனால் பேதங்களை
வளர்க்கிற ஒருவன்; தன்னைப்
பகுத்தறிவுவாதி எனக் கூறிக்கொண்டாலும்
- அவன் ஓராயிரம் சனாதனிகளுக்குச்
சமமானவனே!



கடலில் தூக்கி எறிந்தாலும் அங்கேயும்
கட்டுமரமாக மிதக்கக் கூடிய உறுதியும் பக்குவமும்
உடையவர்கள்தான், கொண்ட கொள்கையில்
வெற்றிபெற முடியும்.

கரையான் புற்றெடுத்த சுவரை,
கவனிக்காமலே விட்டுவிட்டால் -
கடப்பாறை கொண்டு இடிக்காமலே விழுந்துவிடும்!
கறைபடிந்த ஓர் ஆட்சியின் கதியும் அதுவேதான்.



"அமிழ்தம்" என்று தனியாக ஒரு பொருள் இல்லை. உயர்ந்த பொருட்கெல்லாம் உயர்வு குறிக்க அமிழ்தம் என்றுரைப்பார்கள் என விளக்குகிறார் புரட்சிக் கவிஞர் அதனால்தான் வானின்று உலகம் உய்விக்கவரும் மழையை அமிழ்தம் என்கிறார் வள்ளுவப் பெருமகனார்

அமிழ்தம் என்பது தேவலோகச் சந்தையில் கிடைக்கும் பொருளுமில்லை; தேவலோகமென்றே எதுவும் இல்லை! சிறப்பாகப் போற்றப்படும் ஒன்றை அமிழ்தம் என்கிறோம் - அதனால்தான் வானம் வழங்கிடும் நன் மழையை வள்ளுவர் அமிழ்தம் என்றார்!